
# விடுதலைப்புலிகள்

குரல் 18 | ஐப்பசி- கார்த்திகை 1990 | அன்பளிப்பு: ரூபா 7


# எமது இலட்சிய உறுதிக்கு உரமூட்டிய தியாகிகள்



## மாவீரர்களை கௌரவித்து தலைவர் பிரபாகரன் அஞ்சலிச் செய்தி

*"நான் உயிருக்கு உயிராக நேசித்த தோழர்கள், என்னுடன் தோளோடு தோள்நின்று போராடிய தளபதிகள், நான் பல்லாண்டு காலமாக வளர்த்தெடுத்த போராளிகள் களத்தில் வீழ்ந்தபோதெல்லாம் எனது இதயம் வெடிக்கும் ஆயினும் சோகத்தால் நான் சோர்ந்து போவதில்லை. இந்த இழப்புகள் எனது இலட்சிய உறுதிக்கு மேலும் உரமூட்டியிருக்கிறது"*

*இவ்வாறு தமிழீழத்தின் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் இரண்டாவது மாவீரர் நாளையொட்டி வெளியிட்ட அஞ்சலிச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அச் செய்தியின் முழு விபரம் வருமாறு:*

**எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!**

தமிழீழ தேசிய சுதந்திரப்போரில் வீர மரணத்தைத் தழுவிக்கொண்ட எமது வீரர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளாக எதிர்வரும் கார்த்திகை 27ம் நாள் நினைவு கூரப்படுகின்றது.

இதுவே எமது தேசிய நாளுமாகும்

'எமது வீர சுதந்திர வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கிறது. இவர்களது இறப்புக்கள் அர்த்தமற்ற இழப்புக்கள் அல்ல. ''இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக, எமது போராட்டத்தின் உயிர்மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்கு சக்தியாக அமைந்துவிட்டது. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள். சுதந்திரச் சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை அர்ப்பணித்துள்ள இந்த மகத்தான தியாகிகள் காலம் காலமாக எமது இதயக் கோவிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்.';

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப் பிறவி அல்ல. அவன் ஒரு இலட்சியவாதி.

(11 ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்களால் ஒரு நெருக்கடி

★ கிழக்கில் மட்டும் 4000 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்

★ இவர்களில் 2000 மக்கள் முஸ்லிம்களால் கொல்லப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்போராட்டம் இன்று ஒரு புதிய நெருக்கடியைச் சந்தித்துள்ளது. இதுவரைநாளும் சிங்களப்பேரினவாதத்தால் நசுக்கப்பட்டுவந்த தமிழர்கள்-இன்று - முஸ்லிம் காடையர்களின் கொலைவெறிக்குள்ளும் அகப்பட்டு சொல்லொணாத் துயர்களை அடைந்து வருகின்றனர். சிங்கள ஆக்கிரமிப்புக்கெதிராக தமிழர்களுடன்சேர்ந்து போராடவேண்டிய தமிழீழ முஸ்லிம்கள் எந்தவிதமான தீர்க்கதரிசனப் பார்வையும் இல்லாது சிங்களப்பேரினவாதத்திற்கு உட்பட்டு தமிழினஅழிப்பு நடவடிக்கைகளில்ஈடுபட்டுவருகின்றனர்.

இத்தகைய செயல்கள் தமிழீழத்தில் வாழும் முஸ்லிம்கள் தொடர்பான எமது நிலைப்பாட்டில் நாம் வைத்திருந்த நம்பிக்கையைச் சிதைத்துள்ளது.

*கடந்த ஆனிமாதம் 11ஆம் திகதி(11. 06. 90) தொடங்கிய தமிழீழ - சிறிலங்காப் போரைத்தொடர்ந்து அம்பாறை, மட்டக்களப்பு, திருக்கோணமலைப் பகுதிகளில்* ஆயுதம்தாங்கிய முஸ்லிம் கும்பல்களினால் தமிழ் மக்கள்கூட்டம் கூட்டமாகப் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

மிருகத்தனமான முறையில் தமிழ்ப்பெண்கள் முஸ்லிம் காடையர்களினால் பாலியல் வன்முறைக் குள்ளாகின்றனர்.

சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என்ற பேதமில்லாது காட்டுமிராண்டித்தனமாக வெட்டியும், குத்தியும் கொல்லப்படுகின்றார்கள்.

கொல்லப்படும் தமிழர்களின் தலைகள் கொய்யப்பட்டு சாக்கினுள் கட்டி கடலினுள் வீசப்படுகிறது.

படுகொலை செய்யப்படும் இளைஞர்களினதும், இளம் பெண்களினதும் சடலங்கள் சோடிசோடியாகக், கட்டி ஆற்றில் எறிந்து மிலேச்சத்தனமான இரசனைகளை முஸ்லிம் காடையர்கள் வெளிப்படுத்துகின்றனர்.

பாண்டிருப்பு கல்முனை, வீரமுனை, சொறிகல்முனை... இவைபோன்று அம்பாறை மாவட்டத்திலிருக்கும் பல தமிழர் கிராமங்கள் பூண்டோடு அழிக்கப்பட்டு அங்கே முஸ்லிம் குடியேற்றங்களை உருவாக்கி மண்ணை அபகரிக்கும் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

தீவிர மதவெறிபிடித்த முஸ்லிம் காடையர்களின் வெறிச் செயல்களினால் கிழக்கு மாகாணத்தின் (தென் தமிழீழம்) பெரும் பகுதியில் தமிழர்கள் சொந்த இடங்களிலிருந்து விரட்டப்பட்டு விட்டார்கள்.

தமிழ்பேசும் மக்கள் என்ற ரீதியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முஸ்லிம்களையும் முழுமையாக இணைத்து போராட்டத்தை நடாத்த வேண்டும் என்ற நோக்கில் முஸ்லிம் சமூகத்துடன் ஒரு சுமுகமான உறவை ஏற்படுத்தவும், தனித்துவமான அவர்களுடைய மத கலாச்சாரங்களைப் புரிந்து கொண்டு பல்வேறு விதமான எதிர்ப்புகள், சதிகளுக்கு மத்தியிலும் - முஸ்லிம் மக்களை அணிதிரட்ட முயன்றோம்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# புலிகளின் குரல்

## மனித உரிமை மீறல்களுக்கு வழங்கப்பட்ட நோபல் பரிசு

மனித உரிமைகளை மீறுவதில் சிறீலங்கா அரசு உலகத்தில் முதலிடத்தை வகித்துவருகிறது. உலகில் எங்குமில்லாதவாறு, பெரியஎண்ணிக்கையில் மனிதப் படுகொலைகள் இலங்கையில்தான் இடம்பெற்று வருகிறது. ஒரு தேசிய இனத்திற்கு எதிராக அப்பட்டமான இனப்படுகொலை இங்குதான் நடைபெறுகிறது. இதன் காரணமாகவே இலங்கைத்தீவை ஒரு கொலைக்களம் (A Killing Field) என சர்வதேசப் பத்திரிகையாளர்கள் வர்ணிக்கிறார்கள்.

இந்தக் கொலைக் களத்தில் இதுவரை முப்பதினாயிரம் அப்பாவித் தமிழ் மக்கள் கொலையுண்டிருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கில் சிங்களத் தீவிரவாத இளைஞர்களும், அப்பாவிச் சிங்களவர்களும் கொலையுண்டிருக்கிறார்கள். இன்றுகூட தமிழருக்கு எதிராக முழு அளவிலான யுத்தம் ஒன்றை நடாத்திக்கொண்டு தமிழின அழிப்பை தீவிரப்படுத்தி வருகிறது சிங்கள அரசு.

தனது பிரசைகள் சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு அரசின் கடைப்பாடு என்ன என்பதை சர்வதேசச்சட்டம் தெளிவாக வரையறுத்திருக்கிறது. குடிமக்களின் உயிருக்குப் உடைமைக்கும் பாதுகாப்பு அளித்தல், அடிப்படை மனித உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் உத்தரவாதம் அளித்தல், ஆகியன ஒரு அரசின் பிரதான கடமைகளாக நெறிக்கப்பட்டிருக்கின்றன, ஐ. நா மனித உரிமை சாசனமும் இந்தக் கோட்பாடுகளை வலியுறுத்தாமல் இல்லை.

இலங்கைத் தீவுக்கு 'சுதந்திரம்' கிடைத்து பெரும்பான்மை இனம் ஆட்சிபீடம் ஏறிய காலத்திலிருந்து சிங்கள அரசு அடிப்படை மனித உரிமைகளை மீறிவருகிறது. தமிழ் மக்களுக்கு எதிராக திட்டமிட்ட இனப்படுகொலையைப் புரிந்து வருகிறது. தனது பிரசைகள் எனக் கூறிக்கொள்ளும் ஒரு மக்கள் சமூகத்திற்கு எதிராக, மிருகத்தனமாக யுத்தத்தை நடாத்திவருகிறது. சென்ற ஆண்டு மட்டும் ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்களை இந்த அரசு அழித்திருக்கிறது. இப்படியாக மனிதகுலத்தை இணங்கவைக்கும் வகையில் சிங்கள அரசு பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டு வருகிறது.

சர்வதேச உலகமும் சிங்கள அரசை கண்டிக்காமல் விடவில்லை, உலகின் பிரபல்யம்பெற்ற மனித உரிமை நிறுவனங்கள் சிங்கள அரசை வன்மையாகச் சாடியிருக்கின்றன. சர்வதேச மன்னிப்புச்சபை, ஐ. நா மனித உரிமை ஆணைக்குழு, சர்வதேச சட்டவல்லுனர் சபை, உலக திருச்சபை. இப்படியாக பல உலக நிறுவனங்கள் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை கண்டித்திருக்கின்றன. அதுமட்டுமன்றி, ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகள், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளும் இலங்கை அரசின் அடக்குமுறைக் கொள்கை குறித்து தமது அதிருப்தியையும் கண்டனத்தையும் தெரிவிக்கின்றன.

உலகளாவிய இந்தக் கண்டனக் குரல்களைப் பார்க்கும்பொழுது மேற்கத்திய 'நாகரீக' உலகம் இலங்கை அரசை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி தண்டிக்கப்போகிறது. பொருளாதார உதவிகளை நிறுத்தி வழிக்குக் கொண்டுவரப்போகிறது' என்று பலர் எண்ணியிருக்கலாம். ஆனால் உண்மையில் நடந்தது என்ன? சிங்கள அரசின் மனித உரிமை மீறல்களுக்கு தண்டனை விதிப்பதற்குப் பதிலாக மேற்கத்தைய நாடுகள் இலங்கைக்கு பெரிய அளவு பொருளாதார உதவியை வாரி வழங்கியிருக்கின்றன. அதாவது இலங்கை அரசு கேட்டுக்கொண்ட உதவிக்கும் மேலதிகமாக பணம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆயிரம் மில்லியன் டாலர்கள், அதாவது நாலாயிரம் கோடி ரூபா இலங்கை அரசுக்குக் கிடைத்திருக்கிறது. "இலங்கை அரசின் கொள்கைக்கு உலகம்வழங்கிய அங்கீகாரம்" என பிரேமதாசா பெருமைப்பட்டுக் கொண்டார். மனித உரிமை மீறல் என்ற விடயத்தில் உலக சாதனையை நிலைநாட்டிக்கொண்டதில் வளர்ச்சி கண்ட 'நாகரீக' உலகம் பிரேமதாசாவுக்கு "நோபல் பரிசு" வழங்கியிருக்கிறது.

மனித குலத்திற்கு எதிராக மன்னிக்கமுடியாத குற்றங்களைப் புரிந்து வரும் ஒரு பயங்கரவாத அரசை ஊக்குவித்து, உற்சாகமளித்து, தட்டிக்கொடுப்பதுபோல இந்த நிதியுதவி அமைந்திருக்கிறது. இந்தப் பணத்தில் பெரும்பகுதி ஆயுதங்களாக மாறும்; இந்த ஆயுதங்கள் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கப் பயன்படுத்தப்படும். இதனால்இனப்படுகொலை தீவிரமாகும். அப்படியாயின் உலக முதலாளித்துவ நாடுகள் இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலைக்கு மறைமுகமாக உதவியும், ஊக்கமும், அளிக்கின்றனவா? என்ற கேள்வி எழுகிறது.

மேற்குலகிற்கு உண்மையில் மனித உரிமையில் அக்கறையிருந்தால், மனித வாழ்விலும் மனுநீதியிலும் அக்கறையிருந்தால், மனித சுதந்திரத்திலும் தர்மத்திலும் அக்கறையிருந்தால், பாசிச கொள்கையைக் கடைப்பிடிக்கும் இலங்கை அரசுக்கு இந்த அளவு நிதியுதவியை வாரி வழங்கியிருக்கக்கூடாது. இலங்கையில் மனித உரிமை மீறல் உச்சக்கட்டம் அடைந்திருப்பதாக கண்டனம் தெரிவித்துவரும் அதேவேளை, கொலைகாரனுக்கு கொலைக்கருவியை வழங்குவது போல, உலக முதலாளித்துவம் பிரேமதாசாவுக்கு கைகொடுத்து உதவியிருப்பது எமக்கு அதிர்ச்சியையும் கவலையையும் கொடுக்கிறது. இந்த நடவடிக்கையானது இலங்கையில் தமிழர் தேசிய இனப்பிரச்சனையை மேலும் சிக்கலடையச் செய்வதுடன், அரச பயங்கரவாதத்திற்கு ஊக்கமளித்து தமிழினப் படுகொலையை மேலும் தீவிரமாக்கும் என்பது திண்ணம். இந்தத் துர்ப்பாக்கிய நிலைக்கு இலங்கைக்கு உதவிய வளர்ச்சிகண்ட நாடுகளே பொறுப்பேற்கவேண்டும்.

பின்தங்கிய மூன்றாம் உலகத்தில் மனித உரிமைகள் பேணப்படவேண்டும், சனநாயக சுதந்திரங்கள் நிலைநாட்டப்பட வேண்டும், என்ற ரீதியில் மேற்குலகம் குரல்கொடுத்து வருகிறது. மனித சுதந்திரத்தினதும், உலக சமாதானத்தினதும், சர்வதேச சனநாயகத்தினதும் பாதுகாவலர் எனவும் இந்நாடுகள் தம்மைப் பறைசாற்றிக்கொள்கின்றன. ஆனால் இன்றைய மூன்றாம் உலகில், அதாவது பின்தங்கிய ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் நிலவும் எதார்த்த நிலைமை என்ன? இந்நாடுகளில் நிலவும் ஒடுக்குமுறைகளுக்கும், சுரண்டல் முறைகளுக்கும் பின்னணியில் நிற்பவர் யார்? இந்நாடுகளில் தாண்டவமாடும் மனித அட்டூழியங்களுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் காரணகர்த்தாக்கள் யார்? பின் தங்கிய நாடுகளில் பதவி வீற்றிருக்கும் இராணுவ ஆட்சிப் பீடங்களுக்கும், சர்வாதிகார அரசுகளுக்கும் அரசியல் பொருளாதார ரீதியாக முண்டுகொடுத்து வருபவர் யார்? இவற்றிற்கெல்லாம் காரணகர்த்தாக்கள் மேற்குலக முதலாளித்துவ நாடுகள் என்பது இன்று உலகறிந்த உண்மை. உலக முதலாளித்துவத்தின் நவகாலனித்துவ சுரண்டல் வலையில் மூன்றாவது உலகம் சிக்குப்பட்டு சீரழிந்துவருகிறது. இந்த சுரண்டல்முறை மனிதாபிமானமற்ற முறையில் மூன்றாம் உலக மக்களின் இரத்தத்தை குடித்துவருகிறது. இம்மக்களின் மனித உரிமைகளை ஈவிரக்கமின்றி நசுக்கிவருகிறது. எனவே, உலக முதலாளித்துவ நாடுகள் மனித உரிமைபற்றி பேசுவது, பிசாசு வேதம் ஓதுவதற்கு ஒப்பாகும்.

உலக முதலாளித்துவத்தின் அகராதியில் மனிதம், மனிதாபிமானம், மனித தர்மம் என்பனவற்றிற்கு இடமேயில்லை. வர்த்தகம், பொருளாதார இலாபம், அரசியல்-பூகோள நலன், கேந்திர முக்கியத்துவம், உலக ஆதிக்கம் என்பனபற்றியே உலக முதலாளித்துவம் அக்கறை காட்டுகிறது.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதை, இனப்படுகொலை நடைபெறுவதை, மேற்குலகம் நன்கறியும் அதுபற்றி முதலைக்கண்ணீரும் வடித்திருக்கிறது. ஆனால் மேற்குலக வல்லரசுகளுக்கு மனித உரிமை என்ற விவகாரம் முக்கியமானதல்ல. இலங்கையை தனது அரசியல் பொருளாதார ஆதிக்க வலையத்திற்குள் வைத்திருக்கவேண்டும் என்பதில்தான் மேற்குலகம் அக்கறை காட்டிவருகிறது. இலங்கை தொடர்ந்தும் நவகாலனித்துவத்தின் சுரண்டல் தளமாக இருக்கவேண்டும் என்பதில்தான் உலக முதலாளித்துவம் அக்கறை கொண்டிருக்கிறது. ஆகவேதான் இலங்கைக்கு அரசியல் பொருளாதார ஆபத்து ஏற்படும் பொழுதெல்லாம் உலக முதலாளித்துவம் பண முடிச்சுக்களுடன் உதவிக்குஓடிவருகிறது.

நீண்ட காலமாகவே, சிங்கள அரசு உலக முதலாளித்துவ எஜமானின் அடிமையாக வாழ்ந்து வருகிறது. வருடாவருடம் கடன் பிச்சை வாங்கி, ஆயுதப்படைகளை வளர்த்து அடக்குமுறைமூலமாக அரச ஆட்சியை நடத்திவருகிறது. சனநாயகத்தைகுழி தோண்டிப் புதைத்துவிட்டுத் தனது பிரசைகள் எனக் கூறிக்கொள்ளும் ஒரு மக்கள் இனத்தை மிருகத்தனமாக அழித்துவருகிறது, உலகில் தன்னைத் தட்டிக்கேட்க யாருமில்லை என்ற அகம்பாவத்துடன் செயற்பட்டு வருகிறது. மனித உரிமை என்ற விவகாரத்தில் தனது முதலாளித்துவ எஜமானருக்கு எந்த அளவு அக்கறை இருக்கிறது என்பது சிங்கள அரசுக்கு நன்கு தெரியும். உலகத்தின் கண் துடைப்புக்காக ஏதாவது கண்டன விமர்சனங்கள் வரக்கூடும். ஆனால் கடனுதவி நின்றுவிடாது என்பதில் சிங்கள அரசுக்கு நிறைய நம்பிக்கை இருந்து வந்தது இம்முறை இலங்கை அரசு எதிர்பார்த்ததற்கு மாறாக ஒரு அதிசயமும் நடந்திருக்கிறது. அதாவது, தான் கேட்டுக்கொண்ட தொகைக்கு மேலாக, பெருந்தொகையில் கடனுதவி வழங்கப்பட்டதைக்கொண்டு சிங்கள நாடு திகைத்துப்போனது. தொடர்ந்தும் தமிழினப் படுகொலையை நடாத்துவதற்கு, தொடர்ந்தும் மனித உரிமைகளை மீறுவதற்கு உலகப் பொருளாதார வல்லரசுகளின் ஆசிர்வாதம் கிடைத்துள்ளதையிட்டு சிங்கள இனவாத ஆட்சிப்பீடம் ஆனந்தம் கொள்வதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இனப்படுகொலை என்பது ஒரு சாதாரண விடயமல்ல. இனப்படுகொலையானது மனித குலத்திற்கு எதிரான ஒரு மாபெரும் குற்றம். இந்த மனித விரோத குற்றத்தைப் புரிந்துவரும் ஒரு இனத்துவேச அரசுக்கு உலக முதலாளித்துவ வல்லரசுகள் பெருந்தொகையில் பணத்தை வாரி இறைப்பதென்றால் அதன் அர்த்தமும் நோக்கமும்தான் என்ன? இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலைக்கு உலக முதலாளித்துவம் உடந்தையாக இருக்கிறது, ஊக்கமளிக்கிறது, என்று தவிர்க்க முடியாத முடிவுக்குத்தான் நாம் தள்ளப்படுகிறோம்.

உலகத்தில் நடந்து முடிந்ததும், நடந்துகொண்டிருப்பதுமான, இனப்படுகொலைகளுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் உலக முதலாளித்துவ வல்லரசுகளே காரணகர்த்தாக்கள் என்பது வரலாற்று உண்மை. உலக முதலாளித்துவத்தின் ஏகாதிபத்திய, நவகாலனித்துவ வரலாறு இரத்தம் படிந்த இருண்ட அத்தியாயங்களைக் கொண்டது. உலக முதலாளித்துவ வல்லரசுகளின் ஆதிக்க வெறியில் பல பூர்வீக சமூகங்கள் ஒழிக்கப்பட்டன, தேசிய இனங்கள் அழிக்கப்பட்டன, நாடுகள் சிதைக்கப்பட்டன. அமெரிக்க ஏகாதிபத்தியம் செவ்விந்திய மக்களை இனரீதியாக ஒழித்துக் கட்டியது. பல கோடி வியட்னாமிய மக்களை ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்து, ஜப்பானிய மக்கள் மீது அணுக்குண்டுகளைப்போட்டு பேரழிவை ஏற்படுத்தியது. பிரித்தானிய காலனித்துவம் ஆபிரிக்க கண்டத்தில் எத்தனையோ பூர்வீகக்குடி சமூகங்களை பூண்டோடு அழித்தது. கிட்லரின் பாசிச ஜெர்மனி அறுபதுலட்சம் யூத மக்களை நச்சுவாயு முகாம்களில் வைத்து இனக்கொலை புரிந்தது. பிரஞ்சு இராணுவம் அல்ஜீரியாவில் நடாத்திய மக்கள் ஒழிப்பு நடவடிக்கைகள் பயங்கரமானவை. இப்படியாக ஒவ்வொரு வல்லரசுகளின் வரலாறும் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கிறது. இன்றும் கூட, மூன்றாம் உலகில், இவ்வல்லரசுகளின் ஏவல் நாய்களாகச் செயற்படும் சர்வாதிகார ஆட்சிகள் மிருகத்தனமான அட்டூழியங்களையும்-மனிதக்கொலைகளையும் புரிந்து வருவது உலகறிந்த உண்மை.

உலக ஏகாதிபத்தியம் என்பது மனித ஆன்மா அற்ற ஒரு அசுர சக்தி. மனித சுதந்திரத்திற்கும் மனுநீதிக்கும் விரோதமான சக்தி. மனித உரிமைகளை மீறும் சக்தி. உலகின் ஒடுக்கப்படும் மக்கள் இந்த சக்தியிடமிருந்து நீதியையும் தர்மத்தையும் எதிர்பார்க்க முடியாது. அப்படி எதிர்பார்ப்பதும் முட்டாள்தனம். உலகெங்கும் மனித அடக்குமுறை ஆட்சியாளருக்கு தீனிபோட்டுக்கொண்டு, அதே சமயம் மனித உரிமைக்காக போலிக்கண்ணீர் வடிக்கும் இந்த சக்திகளின் நயவஞ்சக நாடகங்கள் குறித்து நாம் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

# மட்டக்களப்பு பிராந்தியத் தளபதி

# செவ்வி

அரசியல் - பூகோள ரீதிகளில் சிக்கல்களும், பிரச்சனைகளும் நிறைந்த மட்டக்களப்பு - அம்பாறைப் பிராந்தியத்தின் தளபதியாக 1987 ஆம் ஆண்டு முற்பகுதியில் நிய மிக்கப்பட்டிருந்தார்.

அன்றிலிருந்து அப்பிராந்தியத்தில் எமது இராணுவ - அரசியற் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருந்து போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றார்.

அவருடன் ஒரு செவ்வி......

*கேள்வி:—* O

*பதில்:—* △

**O தற்போதைய போரின் ஆரம்பப் பொறி மட்டக்களப்பில்தான் உருவானது என்று பத்திரிகைகள் அனைத்தும் குறிப்பிடுகின்றன. இது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

△ இலங்கை அரசுடன் எமது இயக்கம் ஒரு பேச்சுவார்த்தையை நடாத்தி வந்தது. ஒரு நல்லுறவு அடிப்படையில், நம்பிக்கையின் அடிப்படையில் இப்பேச்சுவார்த்தைகள் நடந்தன. இந்த வேளையிலும் கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன, பல புதிய இராணுவ அணிகள் வரவழைக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டன, அதே சமயம் சில சம்பவங்கள் எமக்கு எதிராக திட்டமிட்டு உருவாக்கப்பட்டன. எமது அம்பாறை முகாமிலிருந்து விடுமுறையில் சென்ற ஒரு போராளி, மல்வத்தை சிறீலங்கா படையின் தடுப்பு முகாமில் இறக்கப்பட்டு கைது செய்யப்பட்ட வேளையில், அவர் தான் வந்த விடயத்தைக் கூறிய போதும் அவர் தாக்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட்ட வேளையில் அப்போராளி "சயனைட்" அருந்தி வீரமரணமடைந்தார். (அவருடைய பெயர் 2லது லெப் தரணி) அதே வேளை இறக்காமம் என்ற இடத்திலிருந்த எமது செயலகத்திற்கு வந்த சிறீலங்காப் படையினர் அதன் மீது எறிகணை ஏவுகணைத் (ஆர்.பி.ஜி.) தாக்குதலை நடாத்தினர். மட்டு - அம்பாறைப் பிராந்தியத்தில் பல காவல் துறை நிலையங்கள் புதிதாகத் திறக்கப்பட்டன, இவையெல்லாம் நடந்தும் எமது போராளிகள் மிகவும் கட்டுப்பாட்டுடனும், பொறுமையுடனும் இருந்தார்கள். கொழும்பில் பேச்சு வார்த்தை நடாத்திய எமது குழுவினருக்கு நாம் இதைத் தெரிவித்தோம். இது பற்றி சிறீலங்கா அரசுடன் அவர்கள் கதைத்தபோது சிறீலங்கா அரசு அதை ஒரு பொருட்டாகக் கருதவில்லை.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் சாதாரண ஒரு தமிழ் பொது மகனை ஒரு சிங்களப் பொதுமகன் தாக்கிவிட்டார். இதற்கு நாம் காரணம் கேட்கச் சென்றபோது படையினர் எம்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போது தவிர்க்க முடியாத நிலையில் நாம் அப்பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டோம். அதே சமயம் எமக்கெதிரான தாக்குதல் நடவடிக்கைக்காக சகல பொலிஸ் நிலையங்களிலும், இராணுவ முகாம்களிலிருந்தும் படையினர் வெளியே வந்த போது நாம் தவிர்க்க முடியாத நிலையில் - மட்டு அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களையும் முற்றுகையிட்டு ஆயுதங்களையும் கைப்பற்ற வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது.

**O தற்போதைய போரில் மட்டு அம்பாறை மாவட்டங்களில் படையினருக்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு?**

△ இதுவரையில் 250க்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளனர். ஏறக்குறைய 200க்கும் மேற்பட்ட படையினர் எமது மிதி வெடிகளினால் கால்களை இழந்துள்ளனர். மேலும் பல நூறு படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

**O இவ்வளவு பொலிஸ் நிலையங்களையும், முகாம்களையும் ஒரே நேரத்தில் உங்களால் எவ்வாறு சமாளிக்க (தாக்குப்பிடிக்க) முடிந்தது?**

△ நாங்கள் இவ்வாறான, சண்டைக்கான எந்தவித முன்னேற்பாட்டுடனும் இருக்கவில்லை. ஆனால்! திடீரென எம்மீது அழிப்பு யுத்தம் துவங்கிய போது, எம்முடைய சகல குழுக்களையும், உசார் படுத்தி, படையினரைத் தாக்கி ஆயுதங்களைக் கைப்பற்றச் சென்றோம். ஆனால் நாம் சண்டைக்குத் தயாராக இருந்திருப்போமானால், நாம் கைப்பற்றியதை விட, கூடுதலான இராணுவ முகாம்களை கைப்பற்றியிருப்போம். நாங்கள் போருக்கு தயாராக இருக்கவில்லை. ஆனால் சிறீலங்கா அரசு போருக்கான தயாரிப்புக்களில் ஈடுபட்டிருந்தது எமக்குத் தெரியும்.

**O மட்டு - அம்பாறையில் தற்போதைய போரில் போராளிகள் தரப்பில் எவ்வளவு பேர் வீரமரணமடைந்திருக்கிறார்கள்?**

△ தற்போதைய 4 மாதகால போரில் மட்டு-அம்பாறை மாவட்டத்தில் 132 போராளிகள் வீரமரணம் அடைந்திருக்கிறார்கள்.

**O வடமாகாணத்தின் பெரும் பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. அண்மையில் கூட யாழ் கோட்டை இராணுவமுகாம் புலிகளினால் கைப்பற்றப்பட்டு அங்கு புலிக்கொடியும் பறக்கிறது. மட்டு - அம்பாறை பிராந்தியத்தில் நீங்கள் நகர்ப்பகுதியிலிருந்து பின் வாங்கியிருப்பது போல் தெரிகிறது. இதற்கான காரணம் என்னவென்று சொல்லமுடியுமா?**

△ நாம் ஒரு போதும் மட்டக்களப்பையோ அல்லது இப்பிராந்தியத்திலுள்ள நகர்ப் பகுதிகளையோ எமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளோம் எனச் சொல்லவில்லை

தமிழீழத்திலுள்ள எமது போராளிகள் அனைவருமே தலைவர் பிரபாகரனால் வழி நடத்தப்படுகின்றனர். இங்கு எமது நகர்ப்புறம் வாவிகளாலும், கடலாலும் சூழப்பட்ட ஒரு புவியியல் அமைப்புடன் இருப்பதால் எமக்கு சார்பான ஒரு போர் சூழல் தற்போதைய நிலையில் இங்கு இல்லை. அத்துடன் அதற்குள் அதிக எண்ணிக்கையுடைய போராளிகளுடன் இருந்து நாம் போராடிக் கொண்டிருக்கும் போது, எமக்குச் சில வீணான இழப்புக்கள் ஏற்படலாம். இதைத் தடுக்கவும், எமது குழுக்களை மேலதிகமாகத் தேவைப்பட்ட பகுதிகளுக்குப் பிரயோகிக்கவும் நாம் நகர்ப் பகுதியை விட்டுப் பின்வாங்கினோம்.

**O தற்போதைய போரில் வீர மரணமடைந்த லெப். கேணல் ரீகனை (மட்டு - அம்பாறைப் பிராந்தியத் துணைத் தளபதி) பற்றி சற்று கூறுவீர்களா?**

△ தமிழினத்தின் மீது சிங்கள அரசு மிகப்பெரிய இனப்படுகொலையைக் கட்டவிழ்த்து விட்ட 1983 ஆம் ஆண்டில் வெல்லாவெளியைப் பிறப்பிடமாகக் கொண்ட சிற்றம்பலம் என்ற ரீகன், தன்னை ஒரு விடுதலை வீரனாக, விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைத்துக் கொண்டார்.

சிறந்த ஒரு பயிற்சியாளனான ரீகன் தனது சொந்தப் பிரதேசத்திலே போராட விரும்பி, இங்கு வந்து திறமையான ஒரு போர் வீரனாகச் செயற்பட்டார். போராட்டக் கடமைகளைச் செய்து பல தாக்குதல்களில் திறமையுடன் பங்காற்றினார். இக்காலகட்டத்தில் இவர் சில தாக்குதற் குழுக்களுக்கு பொறுப்பாகவும் நியமிக்கப்பட்டிருந்தார். மட்டு - அம்பாறைப் பிராந்தியத்தில் நிகழ்ந்த குறிப்பிடும்படியான தாக்குதலில் இவரின் பங்கு அளப்பரியது என்பது மக்களும், போராளிகளும் தெரிந்து கொண்ட ஒரு விடயம். பின்னர் இவர் மட்டு - அம்பாறைப் பிராந்திய துணைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். நான் வேறு இடங்களுக்குச் சென்றாலோ, அல்லது வேறுவிடயங்களுக்குப் பங்கு பற்றச் சென்றாலோ இவர்தான் இங்கு பொறுப்பாக இருந்து செயற்படுவார். இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிரான போர் காலத்தில் திறமையாகச் செயற்பட்டார், இப்பகுதியின் படுவான்கரை கொக்கட்டிச்சோலைப் பிரதேசங்களில் இந்தியப்படைகளை திணறடிக்கச் செய்த பல தாக்குதல்களை இவர் நடாத்தினார். அத்துடன் இந்தியாவால் வளர்க்கப்பட்ட தமிழ்த் தேசிய இராணுவம் என்ற இந்திய அடிவருடிக் கும்பல்களை அழிப்பதற்காக எம்மால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் பெரும் பகுதிகளுக்கு ரீகன் தான் தலைமை தாங்கினார்.

இவ்வாறான ஒரு சிறந்த போர் வீரனை நாம் பெற்றிருந்தமையால், இப்பகுதியில் நாம் சிறந்த பல தாக்குதல் சாதனைகளைப் புரியக் கூடியதாக இருந்தது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று.

**O பொதுவாக, எப்போதுமே இந்த மட்டு- அம்பாறைப் பிராந்தியத்தில் தமிழ்- முஸ்லிம் மக்களுக்கிடையே பதற்ற நிலை நிலவிக்கொண்டே இருக்கிறதே இதற்கான காரணம் என்னவென்று நினைக்கின்றீர்கள்?**

△ பொதுவாக எமது பிரதேசத்தில் முஸ்லிம்களும், தமிழர்களும் அயலயல் கிராமங்களில் தான் வசித்து வந்தார்கள். இவர்களுக்கிடையில் காணிப்பிரச்சனைகளும், வியாபாரம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளும் இருந்து கொண்டிருப்பது வழக்கம், ஆனால் இப்பிரச்சனைகள் இவர்களின் கிராமங்களில் இருக்கும் குடிமக்கள் குழுவினரால் தீர்க்கப்பட்டு வந்தது. ஆனால், அப்பிரச்சனைகள் தற்போது ஒரு அரசியல் பிரச்சனையாக மாறி பூதாகரமாக உருவெடுத்து நிற்கின்றது.

இதற்குக் காரணமாக மத வெறிபிடித்த விவேகமற்ற அரசியல் சக்திகள் இருக்கின்றன. அவை தமக்குச் சாதகமான சூழ்நிலைகளை தொடர்ந்தும் வைத்திருப்பதற்காக பிரச்சனைகளை வளர்த்து வருகின்றன.

**O இப்போது சிங்கள அரசு செய்து கொண்டிருக்கும் தமிழின அழிப்பு யுத்தத்தில் உங்களுடைய பிரதேசத்தில் இது வரை எவ்வளவு தமிழ் பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்? எவ்வளவு தமிழ் பொதுமக்கள் அகதிகளாயிருப்பார்கள்?**

△ எமது பிரதேசத்தில் மட்டும் ஏறக்குறைய 3,500 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். ஏறக்குறைய 1,400 தமிழர்கள் காணாமல் போயுள்ளார்கள்.

அகதிகளைப் பொறுத்த வரை மட்டு - அம்பாறைப் பிராந்தியத்தில் வாழ்ந்த அனைத்துத் தமிழ் மக்களும் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். ஏறக்குறைய 4,50,000 (நான்கு இலட்சத்து ஐம்பது ஆயிரம்) தமிழர்கள் சொந்த இடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

**O இந்த அகதிகள் விடயத்தில் பொதுநல ஸ்தாபனங்களின் பங்கு எவ்வாறானதாக இருக்கிறது?**

△ மட்டக்களப்பு பல்கலைக் கழகம் வந்தாறு மூலையில் இருக்கிறது. இங்கு 50,000 திற்கும் அதிகமான தமிழ் மக்கள் அகதிகளாகத் தங்கி இருக்கிறார்கள். இவ் அகதி முகாமானது செஞ்சிலுவைச் சங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே இயங்கி வருகின்றது. இவ் அகதிமுகாம் அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும்போதே அங்கிருந்து 240 தமிழ் இளைஞர்கள் சிறீலங்காப்படையினரால் கைது செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள், இப் படுகொலைச் செய்தியை இதுவரை எந்த ஒரு செய்தி நிறுவனமோ, செய்திப்பத்திரிகையோ வெளியிடவில்லை, இது இவர்களின் மந்தமான செயற்பாட்டிற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். சில சமயங்களில் இவர்கள் சிறீலங்கா இனவெறி அரசுக்குப்பயந்து இச்செய்திகளை வெளியிடாமல் இருக்கலாம்.

**O பொதுவாகவே தமிழீழ மக்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?**

△ எமது விடுதலைப்போர் பல கட்டங்கட்டமாக வளர்ச்சியைக் கண்டுவருகின்றது. தமிழ் மக்களின் குழந்தைகளாகிய நாம் உங்களது ஆதரவுடன் தொடர்ந்து போராடி வருகின்றோம். நாம் ஒரு உறுதியான, தீர்க்கதரிசனப் பார்வையுடைய தலைவனைப் பெற்றிருக்கிறோம். அவரின் வழிநடத்தலின் கீழ் திடமுடன் போராடி வருகின்றோம். இறுதிவெற்றி எமக்கே என்பதில் உறுதியாக உள்ளோம் என்பதை தமிழீழ மக்களுக்கு கூற விரும்புகின்றோம்,

எமது மக்களின் அரசியல் உரிமைக்கான போராட்ட வரலாற்றில் ஓர் புதிய திருப்பத்தை, ஓர் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியது எமது இயக்கமாகும்.

எமது மக்கள் மீது அநீதி இழைக்கப்பட்ட போது, அதர்மம் இழைக்கப்பட்ட போது, எமது நிலம் ஆக்கிரமிக்கப்பட்டபோது, அபகரிக்கப்பட்டபோது நாங்கள் ஆயுதம் ஏந்தினோம்.

எமது மக்களின் சுதந்திரமான வாழ்வுக்காக, எமது குழந்தைகளின் சுபிட்சமான எதிர்காலத்துக்காக, எமது இனத்தின் நிரந்தர விடுதலைக்காக நாங்கள் ஆயுதப்போராட்டப் பாதையை வரித்துக்கொண்டோம்.

இதனடிப்படையில் தான் 1972ம் ஆண்டு ''புலிகள்'' இயக்கம், தனது வரலாற்று ரீதியான பிறப்பை எடுத்தது.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய ஒழுக்க மரபுகளின் நெறிப்படுத்தலில் - நாட்டுப்பற்று, வீரம், தியாகம், அர்ப்பணிப்பு ஆகிய உயரிய பண்புகளுடன் எமது தலைவர் வே. பிரபாகரனின் உன்னதமான வழிநடத்தலின் கீழ் அணிதிரண்ட ஆயிரமாயிரம் போராளிகள் தமிழீழ சுதந்திரப் போரை வெற்றியின் திசையில் முன்னெடுத்தார்கள்.

மக்களிலிருந்து பிறந்து, மக்களிற்குள்ளிருந்து வளர்ந்து, மக்களுக்காக வாழ்ந்த அவர்கள் - மக்களுக்காகவே மரணிப்பதில் மகிழ்ச்சியடைந்தார்கள்; பெருமைப்பட்டார்கள்; திருப்தியடைந்தார்கள்.

இன்று, நாங்கள் கண்டுள்ள இந்த பிரமாண்டமான வளர்ச்சியிலிருந்து நாங்கள் கடந்து வந்த கரடு, முரடான பாதையை எண்ணிப்பார்க்கிறோம். துன்பங்களுக்கும், வேதனைகளுக்கும் மத்தியில் நாங்கள் ஏறி வந்த படிகளைத் திரும்பிப்பார்க்கிறோம். அந்த ஒவ்வொரு படிகளிலும் எம்முடன் கூடவே வந்த எத்தனை தோழர்கள் இல்லாமல் போனார்கள்.

இயக்கத்தின் முதலாவது சாவை அணைக்க மரணப்படுக்கையில் கிடக்கும் போது ''அம்மா அம்மா'' என்று முனகாது 'தம்பி தம்பி' என்று தலைவரை அழைத்தபடி 'இலட்சியத்தைக் காப்பாற்றுங்கள் - இயக்கத்தைக் கட்டி வளருங்கள்' என்று கூறிக் கொண்டிருந்த சங்கர் -

இயக்கத்தின் இரகசியங்களைக் காப்பதற்காகத் தன்னைச் சுட்டுவிட்டு, தனது ஆயுதத்தையும் காப்பாற்றச்சொன்ன சீலன்-

எதிரிகள் அவனைச் சுற்றி வளைத்தபோது எதிரிகளிடம் பிடிபடக்கூடாது என்பதற்காக பிறந்து, தவழ்ந்த தாயின் மடியிலேயே சயனைட் உட்கொண்ட ரபேல்-

ஒருவர் கூட மிதமின்றி குடும்பத்தில் எல்லோருமே படுகொலை செய்யப்பட்ட போதும் தாயகமே தாகமாக வாழ்ந்த ரீகன்-

போர் முனையிலே தன்னுடைய கடமையைக் காக்க வேண்டும் என்பதற்காக விரைந்து சென்றபோது எதிர்பாராத விபத்தில் சிக்கிய சூட்டி-

எதிரிகளிடமிருந்து படகையும், பொருட்களையும் காப்பாற்றுவேன். முடியாமல் போனால் படகுடன் சேர்ந்து நானும் எரிகிறேன் என்று கடலிலே எரிந்துபோன மோகன் மேத்திரி-

கடலின் ஒவ்வொரு பயணங்களின்போதும் சாவு வரலாம் என்பது தெரிந்திருந்தும் பயணங்கள் போனவர்கள். இப்படிப் பயணங்கள் போய் இன்றுவரை திரும்பாமல் பரந்த கடலோடு கரைந்து போன கடல்புலிகள்-

# மாவீரர் நாள்

இன்று, தமிழீழ சுதந்திரப் போரின் வளர்ச்சி என்பது, தமிழீழ தேசிய விடுதலை இராணுவமான தமிழீழ விடுதலைப் புலிகளின் வளர்ச்சியைத்தான் குறித்து நிற்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்னெடுத்துச் செல்லப்படும் இச் சுதந்திரப் போரானது, இன்று முழு மக்களையும் தன்கீழ் அணிதிரட்டிய ஓர் பரந்துபட்ட மக்கள் போராட்டமாகப் பரிணமித்திருக்கின்றது.

இந்த மக்கள் புரட்சியின் அதிசயிக்கத்தக்க விதமான - உன்னதமான இந்த வளர்ச்சியின் பின்னால் நீண்ட ஒரு தியாக வரலாறு. ஒரு சரித்திர காவியமாகத் திகழ்கின்றது.

அளப்பரிய அர்ப்பணிப்பு, மகத்தான தியாகம், உன்னதமான வீரம், அசையாத மன உறுதி என்பவற்றின் ஒன்றிணைந்த பிரதிபலிப்புகளாக தமிழீழத் தாயின் மடியில் வீழ்ந்துவிட்ட அவளின் 2,350 புதல்வர்கள் - எங்கள் சுதந்திரப்போர் வரலாற்றின் காவிய நாயகர்களாக ஒளிர்கிறார்கள்.

ஆயிரமாயிரம் இனிய கனவுகளைச் சுமந்து கொண்டிருந்த தங்கள் இளமை வாழ்வை தமிழீழம் என்ற புனிதத் தாயிற்கு அவர்கள் காணிக்கையாக்கினார்கள்.

''வெடித்து தன்தோழர்கள் பலரைக்கொன்றுவிடப் போகிறது அந்தக் குண்டு'' என்பதை நொடிப் பொழுதில் உணர்ந்து, அவ்வெடி குண்டினை தன் வயிற்றோடு அணைத்து, அக் குண்டின் சிதறல்களைத் தானே தாங்கிய அன்பு-

அவனையும், அவனது தம்பியையும் எதிரிகள் பிடிக்க முற்பட்டபோது, தனது தம்பியை தானே சுட்டுவிட்டு, தனக்கும் சுட்டுத் தன்னையும் அழித்துக்கொண்ட ரவிக்குமார்-

எதிரிகள் அவர்களைச் சுற்றி வளைத்தபோது - தப்பமுடியாது என்ற நிலையில், ஒருவரை ஒருவர் கட்டி அணைத்தபடி, தங்களிடமிருந்த ஒரேஒரு கைக்குண்டை தமக்கிடையில் வெடிக்க வைத்த ஜீவா, ரஞ்சன்-

நாங்கள் எதிரிகளிடம் அகப்படப் போகின்றோம் என்ற இறுதி நிமிடத்தில், தம்மிடமிருந்த ஒரே ஒரு ''சயனைட்'' குப்பியை பாதி பாதியாக உட்கொண்டு தம்மையே அழித்துக்கொண்ட அன்ரன், உமாராம்.


கடுமையான சுகயீனத்தின் போதும் மழையையும், பனியையும் பார்க்காது தனக்குரிய கடமையிலேயே கண்ணாயிருந்து - அதனால் வந்த உயிராபத்தையும் ஏற்றுக்கொண்ட சாதியா-

தான் திரும்பி வரமாட்டேன் என்பது உறுதியாகத் தெரிந்திருந்தும் - தன் உடற்தசைகள் துகள்துகளாகச் சிதறிப்போகும் என்பதை அறிந்திருந்தும் சாவை வண்டியிலே காவிச்சென்று காற்றோடு காற்றாகிப்போன கரும்புலி மில்லர்.

புரட்சிகர ஆயுதப் போராட்டத்தில் பெண்களும் அணிதிரள வேண்டும் என்ற தலைவர் பிரபாகரனின் நோக்கத்தை - சமூகத்தின் அடிமைத்தனம் மிக்க பண்பாட்டு வழமையின் வரம்புகளைத் தகர்த்து - செயல் வடிவமாக்கி போர் முனைகளிலே களப்பலியாகிவிட்ட பெண்புலிகள்.

இந்திய - சிறிலங்கா அரசுகளின் இணைந்த நம்பிக்கைத் துரோகத்தால் தம்மையே அழித்துக்கொண்டதன் மூலம் - தமிழீழ மக்களைப் பீடித்திருந்த மாயைகளுக்கும், போலி நம்பிக்கைகளுக்கும் சவக்குழி தோண்டிய புலேந்திரன் - குமரப்பா உட்பட்ட பன்னிருபுலிகள்-

[7ஆம் பக்கம் பார்க்க]



# துன்பங்களை பகிர்ந்துகொள்வோம்

**அன்பார்ந்த தமிழீழமக்களே!**

நீங்கள் இதுவரை அதிக அளவில் அறிந்திராத துயரமான செய்தியொன்றை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அவைகள் நடந்து முடிந்துவிட்ட சம்பவங்கள் தான். ஆனால் அது மறைக்கப்பட்டுவிட்டதால் உலகத்தின் முகடுகளை உசுப்பவில்லை.

கடந்த 13-09-90 இல் இருந்து 24-10-90 வரையிலான 41 நாட்களும் மட்டக்களப்பு, திருக்கோணமலைப் பகுதிகளில் எமது தோழர்களுடனும், மக்களுடனும் வாழ்ந்தேன்.

எங்கள் உடன்பிறப்புக்கள், அங்குபடும் வேதனைகளும், இன்னல்களும் கொஞ்சநஞ்சமல்ல. தமிழனென்று இந்நாட்டில் பிறந்ததற்காக அவர்கள் கொல்லப்படுகின்றனர். அகதிகள் ஆக்கப்படுகின்றனர்.

இன்றும் அவர்கள் எதுவுமற்றவர்களாக மரங்களுக்குக்கீழும், மதகுகளுக்கு அடியிலும், படுவான் கரைக்காடுகளிலும் தங்களது வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

எட்டி நடந்தால் கிட்டவாகவுள்ள எங்கள் தாயகத்தின் ஒரு பகுதியில் எங்கள் சகோதரர்கள் சிங்களப் பேரினவாதிகளாலும், முஸ்லிம் காடையர்களினாலும், அடித்து விரட்டப்படுகின்றார்கள்.

இவர்கள் ஒருநேர உணவிற்கே வழி அற்று, மாற்றுடைகள் ஏதுமின்றி உதவிகள் அற்றுத் தவிக்கின்றனர்.

எங்களது கொடியில் மலர்ந்த பூக்களில் சில வாடிக்கிடக்கின்றன. அவர்களுக்கு உதவவேண்டியது எமது கடமை.

சிங்கள மக்களுக்கு உதவ சிறீலங்கா அரசு இருக்கிறது. முஸ்லீம் மக்களுக்கு உதவ சிறீலங்கா அரசும், அரபு நாடுகளும் இருக்கின்றன.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை நாம்தான் எமக்கு உதவ வேண்டும்.

இன்று, தென் தமிழீழத்தில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டு விரட்டப்பட்டார்கள்.

அப்பகுதிகளில் மீளக்குடியமர்த்தல் எனும் பெயரில் சிங்களக் குடியேற்றம் நடக்கிறது.

1732 ச.மை. பரப்பளவான 'அம்பாறை' மாவட்டத்தில் 1200 ச.மைல்களை சிங்களவர்கள் ஆக்கிரமித்துவிட்டார்கள்.

அவ் ஆக்கிரமிப்பாளர்களுடன் மோதுவதைவிடுத்து சிங்களப்படைகளுடன் சேர்ந்து அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 80,000ற்கும் மேற்பட்ட தமிழ் மக்களை முஸ்லிம்கள் படுகொலை மூலம், விரட்டிவருகின்றனர்.

தமிழர்களை விரட்டி அப்பகுதிகளை தாங்கள் ஆக்கிரமிக்கலாம் என முஸ்லிம்கள் நினைக்கின்றனர்.

எவ்வளவோ கொடுமைகளை, இனப்படுகொலைகளை சந்தித்தும் அந்த மக்கள் விடுதலைப்போராட்டத்தில் மேலும் மேலும் உறுதியாகவே இருக்கின்றார்கள்.

எவ்வளவோ இடைஞ்சல்களுக்கு மத்தியிலும்அம் மக்கள் தங்களது பகுதியின் ஏதோ ஒரு மூலையில் மண்ணைக் கிளறி வாழவே முயற்சிக்கின்றனர். அந்த மண்ணைவிட்டு அவர்கள் ஓடத்தயாராக இல்லை.

அம்பாறை, மட்டக்களப்பு, திருக்கோணமலையில் வாழும் தமிழர்களில் பலரின் குடும்பங்கள் பிரிந்துவிட்டன. கணவனுக்கு, மனைவியோடு - பெற்றோருக்கு, பிள்ளைகளோடு தொடர்புகள் அற்று திக்குத் திக்காகப் பிரிந்து விட்டார்கள்.

பிரிந்தவர்கள் உயிரோடு இருக்கின்றார்களா? என்பது கூட அவர்களுக்குத் தெரியாது.

எதிர் வரும் மாவீரர் வாரத்தில் திருக்கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில் வாழும் எமது சகோதரர்களுக்கு உதவும் வகையில் மற்றைய மாவட்டங்களில் வாழும் தமிழ் மக்களிடமிருந்து உதவிகள் பெற இருக்கின்றோம்.

இது - தமிழீழம் ஒன்றுபட்டு நின்று - ஒரே தலைமையின் கீழ் போராடும் காலம்.

எம் மக்கள் எங்கு பாதிக்கப்பட்டாலும் உதவ வேண்டியது எமது கடமையாகும்.

உலகமே திகைத்து, வெட்கப்படும் அளவிற்கு நாமே எமது உடன் பிறப்புக்களுக்கு உதவ முன் வருவோம்.

எல்லோருமே இப்போரினால் பாதிக்கப்பட்டுத் தான் உள்ளார்கள். ஆனாலும் அதிக அளவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்தளவு பாதிப்பைச் சந்தித்திருக்காத தமிழீழ மக்கள் அனைவரும் உதவ முன் வரவேண்டும். வரும் துன்பங்களை அனைவரும் பகிர்ந்து கொள்வோம்.

உணவு, உடைகளைப் பகிர்ந்து கொள்வோம். ஒரே தலைமையின் கீழ், ஒரே கொடியின் கீழ் ஒன்றிணைந்து போராடுவோம்.

நேற்றுவரை
பாட்டி மடியில் கதை கேட்டவன்
பாட்டிக்கு ஒரு வரலாறு சொல்கிறான்

வானத்தைக் காட்டிச்சொன்ன தேவகதைகளால்
வளைந்த முதுகை நிமிர்த்த

இவன் மண்ணையும் மக்களையும் காட்டி
புதுக்கதை சொல்கிறான்.

தவழ்ந்து ஓடி விளையாடிய வீடு
தன் கையால் மண் அளைந்த வாசல்
தாய்மண் நேசிப்புக்கு மூல அச்சாரம்.

வெற்றிலை உரலோடு விளையாடியவன்
இன்று களத்தில் எதிரியோடு
கையில் புதிய ஆயுதத்தோடு.

இப்போராளி தண்ணீர்ஊற்றிய தென்னையும்
செந்நீர் ஊற்றிடும் தேசமும்
நாளை வளர்ந்து நிமிரும்.



# இப்படித்தான் தென் தமிழீழம்

உலக சரித்திரத்தில் நடந்த கொடூரமான யுத்தங்களின் போதும், எழுச்சியுற்ற விடுதலைப் போராட்டங்களை அடக்கி அழிக்கவும் நிகழ்த்தப்பட்டபடுகொலைகள்,கொடூரமானவை

உலகின் மிகக் கொடிய சர்வாதிகாரிகளாக இருந்தவர்கள் - தாங்கள் ஆக்கிரமித்த நாடுகளில் துப்பாக்கி ரவைகளையோ, வெடிகுண்டுகளையோ பயன்படுத்தாமல் மிகப் பெரிய மனித அழிவுகளைச் செய்தார்கள்.

அவற்றைப் போலவே இன்றும் .........

2ம் உலகப் போரிலும், அதற்கு முன்னரும், பின்னரும் உலகில் நிகழ்த்தப்பட்ட மனித அழிப்புக்களை இன்றைய தென் தமிழீழம் அச்சொட்டாக நினைவுபடுத்துகிறது.

இப்படித்தான் தென் தமிழீழம் விடுதலைப் போருக்கு விலை செலுத்துகின்றது.

இரண்டாம் உலகப்போரின் போதும், அதன் பின்னரும் நிகழ்ந்த கோரமான சம்பவங்கள், அவலமான காட்சிகள் என வரலாற்று ஆசிரியர்களினால் குறிப்பிடப்படும் சம்பவங்களை ஒத்த மிருகத்தனமான காட்சிகளை, இன்று தென் தமிழீழப் பகுதிகளான மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கோணமலை கண்டு வருகின்றன.

உலகிலிருந்த யூத இனத்தைப் பூண்டோடு ஒழிக்க முயற்சித்த கிட்லரின் நாஜிப் படைகள், வழக்கமாக வைத்திய பரிசோதனைகள், ஆய்வுகளுக்காக எலிகளைப் பயன்படுத்தும் முறைகளைத் தவிர்த்து, எலிகளுக்குப் பதிலாக கைதாகியுள்ள யூதர்களைப் பயன்படுத்தும்படி கட்டளையிட்டார்கள்.

இதையொத்த சம்பவமொன்று 13.9.90 அன்று திருக்கோணமலையிலுள்ள பச்சனூர், இருதயபுரம்அகதி முகாமில் இடம்பெற்றுள்ளது.

தாங்கள் உருவாக்கிய புதிய ரக மிதி வெடிகளின் சக்தியை தமது கண்ணெதிரிலேயே பரீட்சித்துப் பார்க்க இராணுவத்தினர் விரும்பினார்கள். எனவே இந்த அகதிமுகாமுக்கு முன்னால் மிதிவெடிகளைப் புதைத்துவிட்டு, அதற்கு மேலால் நடந்து செல்லும்படி அங்கிருந்த இரண்டுதமிழ்ச்சிறுமிகளுக்கு இராணுவத்தினர் உத்தரவிட்டனர். விளைவு... பத்து வயதுச் சிறுமி ஒருத்தி காலை இழந்தாள். பின்னால் வந்த ஒன்பது வயதுச் சிறுமி ஒருத்தி இரண்டு கண்களையும் இழந்தாள்.

### வரலாற்றின் சோகங்கள்

1942ம்ஆண்டு சித்திரை 23ம் திகதி இங்கிலாந்துப்படையின் ''யோக்சயர்'' காலாட்படையின் இரண்டாவது பிரிவினர் பர்மாவிலுள்ள ரங்கூனிலிருந்து 50 மைல் தொலைவில் இருந்த சிறு கிராமமொன்றில் மாலை நேரத்தில் தங்கியிருந்தபோது, திடீரெனக் கிராமத்தின் ஒரு புறத்திலிருந்து புகை மண்டலம் எழுவதைக் கண்டனர். (அப்போது ரங்கூன் ஜப்பானியப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது) உடனே இதை அவதானித்த ஆங்கிலேய இராணுவம் ''பிறிஸ்பற்றிக்'' என்ற படை அதிகாரியின் தலைமையில் அவ்விடத்தை நெருங்கினர்.

அங்கே வீடொன்று தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. தமது வருகையை ஜப்பானியப் படையினருக்கு பூடகமாக அறிவிக்கவே வீட்டினை எரித்துப் புகையினைக் கிளப்புகின்றார்கள் எனச் சந்தேகித்து, அப்படை அதிகாரி அக்கிராமத்திலிருந்த ஆண்கள் அனைவரையும் அழைத்து வந்து அவர்களைக் கொன்று குவித்தார்கள்.

பைலோ ரஷ்யாவிலுள்ள ''கத்தீன்'' செக்கோசிலவாக்கியாவிலுள்ள ''லிடிஸ்'' பிரான்சிலுள்ள 'ஒறாடொர்' ஆகிய கிராமங்கள், யுத்த வரலாற்றில் கிட்லர் வாதிகள் இழைத்த கொடுஞ் செயல்களுக்கு அடையாளச் சின்னங்களாக விளங்குகின்றன. அக்கிராமங்களில் வாழ்ந்த சகலரும் கிட்லர் வாதிகளினால் படுகொலைசெய்யப்பட்டனர். (1985 சோவியத்நாடு இதழ்9)

இதே போன்ற சம்பவங்கள் தென் தமிழீழத்தில் ஏராளமாக இடம் பெற்றுள்ளன.

11-9-90 அன்று மட்டக்களப்பிலுள்ள தன்னாமுனை, பிள்ளையாரடி, சத்துருக்கொண்டான் ஆகிய தமிழர் பகுதிகளைச் சிங்களப் படைகளும், முஸ்லிம் ஊர்காவற் படைகளும் சுற்றி வளைத்தன. பால்குடிக்கும் குழந்தையிலிருந்து குடுகுடு கிழவர்கள் வரை ஆண்கள், பெண்கள் அனைவரும் சுட்டும் வெட்டியும், குத்தியும் கொல்லப்பட்டனர். இதில் மொத்தம் 217 தமிழர்கள் கொல்லப்பட்டனர். இதே போன்று அம்பாறை மாவட்டத்திலிருந்த சவளக்கடை,புதுக்குடியிருப்பு, பாட்டாளிபுரம், நல்லூர், வீரமாநகர் ...... திருக்கோணமலைமாவட்டதிலிருந்த இறக்கந்தை, கூனித்தீவு, சம்பூர் மூதூர், கட்டைபறிச்சான் போன்ற இடங்களில் தமிழர்கள் குவியல் குவியலாகக் கொன்றொழிக்கப்பட்டனர். இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் இப்படு கொலைகள் இடம் பெற்றதற்கான சான்றுகள் ஏதாவது அகப்பட்டு, அது சரித்திரத்தில் பொறிக்கப்பட்டுவிடக் கூடிய நிலைமைகள் ஏற்படாமல் மிகக் கவனமாகத் திட்டமிட்டு இப்படு கொலைகள் செய்யப்பட்டுள்ளன.

யூதர்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த முகாம்களிலிருந்து கூட்டங் கூட்டமாக அவர்களைக் கொண்டுசென்று அறைகளுக்குள் அடைத்து விசவாயுக்களைச் செலுத்தி அவர்களைக் கொன்றதாக வரலாறு கூறுகின்றது. இவ்வகையில் ''கெஸ்டபோ'' சிறைச்சாலை பிரபல்யம் பெற்றிருந்தது. யூதர்களைக் கொல்வதற்காக குண்டுகளைப் பயன்படுத்துவது வீணானது என்றே நாஜிகள் கருதினர்.

இதேபோன்ற நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வந்தாறுமூலை, சித்தாண்டி ஆகிய இடங்களில் அமைந்திருந்த அகதிகள் முகாமில் இடம்பெற்றுள்ளன.

5. 9. 90 அன்று வந்தாறுமூலை பல்கலைக்கழகத்துள் அமைந்திருந்த அகதிகள் முகாமினுள், புகுந்த சிங்களப் படைகளும், முஸ்லிம் காடையர்களும் அங்கிருந்த அகதிகளுள் இளவயதினரைத்தேர்ந்தெடுத்து 142 தமிழர்களைக் கைது செய்தனர். இவர்களில் 6 பேரின் கைகளில் T. 56 ரக துப்பாக்கிகளைக் கொடுத்து புகைப்படம் பிடித்தனர். பின்னர் இந்த 6 இளைஞர்களின் கழுத்தில் சைக்கிள் ரயர்களை மாட்டி உயிருடன் எரித்தனர், ஏனையவர்கள் தடயங்கள் இல்லாதவாறு அழிக்கப்பட்டுள்ளனர்.

பெண்கள் சிங்கள இராணுவத்தாலும், முஸ்லிம் காடையர்களினாலும் இவ் அகதி முகாமிலிருந்து வெளியே இழுத்தெடுக்கப்பட்டு பாலியல் வன்முறைக்குட்படுத்தியபின் கொல்லப்பட்டுள்ளனர்.

வந்தாறுமூலை பல்கலைக் கழக அகதிமுகாமில் சுமார் 52, 000 தமிழ் அகதிகள் தங்கியிருந்தனர்.

### துயரம் நிறைந்த பகுதி

இதன் காரணமாக ஏற்பட்ட இட நெருக்கடி, சுகாதாரப் பற்றாக்குறை காரணமாக வயிற்றோட்டம் கண்டு 32 குழந்தைகள் உட்பட 40 பேர் மரணமாகியுள்ளனர்.

குறிப்பாக, அகதி முகாமை அண்மித்திருந்த வீடுகளுக்குச் சென்றவர்கள் காணாமல் போயுள்ளனர். கைது செய்யப்பட்ட தமது பிள்ளைகளை, கணவன்மாரைத் தேடிச் சென்ற பெற்றோரும், மனைவிமாரும் காணாமற் போயுள்ளனர்.

சித்தாண்டி முருகன் கோயில், சவளக்கடை, கல்லாறு, தம்பலகாமம் ஆகிய இடங்களிலிருந்த அகதி முகாம்களிலும் இவ்வாறான துயரங்கள் நடந்துள்ளன.

தென் தமிழீழத்தின் மையப் பகுதியான மட்டக்களப்பு மாவட்டம் இன்று அகதிகளினால் நிரம்பி வழிகின்றது. அம்பாறை மாவட்டத்திலிருந்து தமிழர்களை முற்றாக வெளியேற்றும் திட்டத்தை மிகத் தீவிரமாகச் சிங்கள அரசுடன் சேர்ந்து முஸ்லிம் கும்பல்களும் அமுல் நடாத்துவதினால், தம்பிலுவில், திருக்கோவில், காரைதீவு ஆகிய பகுதிகளுக்குள்அடைபட்டதமிழர்களைத் தவிர ஏனையோர் அனைவரும் மட்டக்களப்பு மாவட்டத்துள் தஞ்சம் புகுந்துவிட்டனர். இவர்கள் மட்டக்களப்பு வாவிக்கு மேற்குப் புறமாக உள்ள பகுதிகளிலேயே (படுவான்கரை) தஞ்சமடைந்துள்ளனர்.

இதேவேளை திருக்கோணமலைமாவட்டத்திலிருந்து அகதிகளானோரில் கணிசமானவர்கள் மட்டக்களப்பு - திருமலை மாவட்டத்தின் எல்லையாக விளங்கும் வெருகலிலும், மற்றும் கதிரவெளி, வாகரை போன்றபகுதிகளிலும் தற்போது வசித்து வருகின்றனர்.

வாழைச்சேனை தொடக்கம் மருதமுனை வரையிலான பிரதான பாதையை அண்டிய பகுதிகளில் ஒட்டமாவடி, வாழைச்சேனை, ஏறாவூர், காத்தான்குடி ஆகிய முஸ்லிம் கிராமங்களைத் தவிர ஏனைய தமிழ்க் கிராமங்கள் அனைத்தும் இன்று காலியாகவே உள்ளன, இப்பகுதி மக்கள் காட்டுக் கரைகளிலும், ஆற்றங்கரை ஓரங்களில் சிறுகுடிசைகளை அமைத்தும், மரநிழல்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் பாண்டிருப்பு, கல்முனை 3ம் குறிச்சி,வீரமுனை, அட்டைப் பள்ளம் போன்ற பகுதிகளில் இன்று தமிழர்கள் இல்லை அவர்கள் முஸ்லிம் ஊர்காவல் படைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதனால் தங்களது இருப்பிடத்துக்கு திரும்புவது பற்றிநினைத்துக்கூடப்பார்க்க முடியாத நிலையிலுள்ளன

இப்படித்தான்

தென் தமிழீழம்

விடுதலைப்போரிற்கு

விலைசெலுத்துகிறது



இந்தச் சம்பவத்தில் கொலை செய்வதற்காக துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டதைவிட கத்தி, வாள் போன்ற கூரிய ஆயுதங்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலோர் திருமணமானவர்கள்.

செஞ்சிலுவைச் சங்கத்தினர் போன்ற சமூக சேவையாளர் முன்னிலையில் இச் சம்பவம் இடம்பெற்றும் இப் படுகொலைகளைப் பகிரங்கப் படுத்துவதில் இவர்கள் சிரத்தை காட்டவில்லை.

மேற்குறித்த வந்தாறுமூலை பல்கலைக்கழகப் படுகொலை நடந்த பின்னரும், இதே முகாமில் மீண்டும் 27.9. 90 அன்று 8 பேர் இவ்வாறு கைது செய்து அழிக்கப்பட்டனர். பெருமளவு தமிழ்ப்

திருக்கோணமலை பகுதியிலிருந்த தம்பலகாமம் அகதி முகாமிலிருந்து கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டவர்கள் பற்றி அவர்களின் உறவினர்கள். அப் பகுதி இராணுவ அதிகாரிகளுள் ஒருவரான''சுரேஸ்காசிம்'' என்பவரைக் கேட்டபோது ''கைது செய்யப்பட்டவர்களைப் பற்றி மட்டும் கேட்க வேண்டாம்'' என்று புன்னகைத்தபடி பதிலளித்தாராம். இந்த சுரேஸ் காசிம்தான் 85, 86 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திருக்கோணமலை - அம்பாறை மாவட்டங்களில் நடந்த தமிழர் படுகொலைகளில் பிரதான பங்கு வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1986 ஆம் ஆண்டு மாசி மாதம் 19 ஆம் திகதி நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் விவசாயிகள் படுகொலை செய்யப்பட்ட உடும்பன்குளம் படுகொலையில், சுரேஸ் காசிம் என்ற இந்த முஸ்லிம் இராணுவ அதிகாரியின் பங்கும் இருந்தது.

# விடுதலைப்போருக்கு விலைசெலுத்துகிறது

அம்பாறை மாவட்டத்தைச் சுற்றிவரப்பலபகுதிகளில் இராணுவ,ஊர்காவற்படை முகாங்கள் போடப்பட்டுள்ளதால் அங்கே இராணுவ பயங்கரவாதம் தலைவிரித் தாடுகின்றது. அப்பகுதிகளில் முஸ்லிம் ஊர்காவற் படையினரே தமிழ் இன .அழிப்பில் மிக மும்முர மாக ஈடுபட்டுள்ளனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தீவிர மத வெறிப் பிரச்சாரம் மேற்குறித்த நிலைமைக்கு முக்கிய காரணமாகவுள்ளது.

இதுவரை காலமும் முஸ்லிம்களுக்கும் - தமிழர்களுக்கும் அவ்வப்போது முரண்பாடுகள் தோன்றினாலும் தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப் படுவது மிகக்குறைவு, ஆனால் இம்முறை சிங்கள இராணுவத்துக்கு இணையாக முஸ்லிம் காடையர்களும் தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். பாதிக்கப்படும் பெண்கள் அனேகமாக உயிருடன் திரும்புவதில்லை. சில பெண்கள் காட்டு மிராண்டித்தனமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.

கல்முனையில் இராணுவ பயங்கரவாதத்திலிருந்து தப்பி ஓடிக் கொண்டிருந்த 14 வயதுத் தமிழ் யுவதி ஒருத்தி சிங்களப் படைகளிடம் சிக்கி பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டாள். பின்னர் இவள் முஸ்லிம் ஊர்காவற் படையிடம் கொடுக்கப்பட்டாள். ஒரு கல்லை நட்டு நிர்வாணமாகவே அதை மூன்று முறை சுற்றும்படி ஊர்காவற் படையால் பணிக்கப்பட்டாள். அவ்விதமே சுற்றி வந்ததும் " இஸ்லாமிய மார்க்கத்தில் விபச்சாரிக்குரிய தண்டனை இதுதான் " எனக் கூறிக்கொண்டு பாலியல் வன்முறைக்குட்படுத்தப் பட்ட அந்தத் தமிழ் யுவதியை கல்லால் எறிந்து கொன்றார்கள். மட்டக்களப்பு பிராந்திய அரசியல் பொறுப்பாளர் கரிகாலனின் கூற்றுப்படி என்றுமில்லாதவாறு இன்றுதென் தமிழீழத்தில் தமிழ் இனப்படுகொலை நடைபெறுகின்றது. இம்முறை சிங்களப் பேரினவாதிகளுடன் முஸ்லிம் வெறியர்களும் இணைந்து விட்டார்கள்.

இதுவரை மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் 4000ற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கானோர் காணாமல் போயுள்ளனர் ஆயிரக்கணக்கான வீடுகள், வர்த்தக நிலையங்கள் கொள்ளை இட்டபின் தகர்க்கப்பட்டு விட்டன.பல தமிழர் கிராமங்கள் பூரணமாக அழிக்கப்பட்டன. அம்பாறை மாவட்டத்திலுள்ள சில தமிழர் கிராமங்கள் முஸ்லிம் கும்பல்களினால் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டன.

தமிழ்ப் பெண்களை பாலியல் வன்முறைக் குட்படுத்துவதில் சிங்கள இராணுவத்தையும் மிஞ்சும் வகையில் முஸ்லிம் காடையர்கள் வெறித்தனம் காட்டுகின்றனர். திருக்கோணமலை அரசியல் பொறுப்பாளர் ரூபன் சொல்கிறார்.

அரக்கனுடனும் போராட்டத்தை நடாத்திக் கொண்டிருக்கின்றார்கள். மாங்காயும், தேங்காயும்தான் இவர்களின் பிரதான உணவு. இந்த உணவையும் பெறுவதற்கு உயிரைக் கையில் பிடித்தபடி இரவில் கிராமங்களுக்கு சென்று சேகரித்துவந்து உண்கின்றனர். அகதிமுகாங்களிலுள்ள சிறுவர்களைப் பார்க்கும் போது வெளி நாட்டுச் சஞ்சிகையில் வரும் எதியோப்பிய சிறுவர்களைப் போன்று எலும்பும் தோலுமாகக் காட்சியளிக்கின்றனர். கிட்லரின் தடுப்பு முகாங்களைப் போலவே சிறிலங்கா அரசு அமைக்கும் அகதி முகாங்களும் உள்ளன.

அகதிமுகாங்கள் என்ற ஒன்றே தென் தமிழீழத்தில் இல்லை.தடுப்பு முகாங்களைத்

படும் தமிழர்களைக் கொன்று குவியலாகப் போட்டுவிட்டு ரயர் போட்டு எரிப்பது இங்கே சாதாரணவிடயம்.

அண்மையில் (23-10-90) திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிளப்பன்பேக் அகதி முகாமிலிருந்து சிங்கள இராணுவத்தாலும், முஸ்லீம் ஊர்காவற்படையாலும் அழைத்துச் செல்லப்பட்ட 23 தமிழர்கள். உவர்மலையில் வைத்துக் கொல்லப்பட்டார்கள்.

இதே போன்று பச்சனூர் அகதிமுகாமிலிருந்தும் 25.8.90 அன்று 42 தமிழர்கள் சிங்களப்படைகளாலும் முஸ்லிம் ஊர்காவற் படைகளினாலும் அழைத்துச் செல்லப்பட்டு கொன்று புதைக்கப்பட்டனர்.


கவே வெளியேற்றி அதைச் சிங்கள மயமாக்கும் திட்டத்தை சிறிலங்கா அரசு நடைமுறைப்படுத்துகின்றது.

அதற்காக மாபெரும் மனிதப்படுகொலையைப் புரிகின்றது. இந்தப் படுகொலைகளில் பெரும்பாலானவை வெளியுலகத்திற்குத் தெரியாதபடி மறைக்கப்பட்டுவிட்டன.

இதில் வேதனைக்குரிய விடயம் என்னவென்றால் எமது மக்களுடனேயே வாழ்ந்த முஸ்லிம்களும் தமிழினப்படு கொலைகளில் இறங்கியிருப்பதுதான்.

ஆனாலும் இத்துரோகத் தனத்தின் மத்தியிலும் இன அழிப்புகளுக்கு முகம்கொடுத்த

இப்படித்தான்
தென் தமிழீழமும்
விடுதலைப் போருக்கு
விலை செலுத்துகிறது.





இராணுவ பயங்கர வாதம் ஒருபுறம், முஸ்லிம் கும்பல்களின் அராஜகங்கள் இன்னொருபுறம் இருக்க தென் தமிழீழ மக்கள் பட்டினி

தான் சிறீலங்கா அரசு அவ்விதம் அழைக்கின்றது.

அத் தடுப்பு முகாங்களிலிருந்து கொண்டு செல்லப்

இன்னும் பலர் காணாமல் போயுள்ளனர்.

தென் தமிழீழத்திலிருந்து தமிழர்களை முற்றுமுழுதா

படி தென்தமிழீழத்தில் விடுதலைத் தீ முன்னைவிட இன்று கொழுந்து விட்டெரிகின்றது.

## மாவீரர்......

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் காந்திய முகமூடியைக் கிழித்து, அதன் ஆக்கிரமிப்புச் சுயரூபத்தை தமிழீழ மக்களுக்கும், உலகுக்கும் அம்பலப்படுத்த, தன் உடல் நார்களை அணுஅணு வாகச் சித்திரவதை செய்த திலீபன்-

இவர்களைப்போல இன்னும் எத்தனை, எத்தனை இரத்த காவியங்கள்.........

எத்தனை அற்புதமானவர்கள் இவர்கள்: எத்தனை உன்னதமானவர்கள் இவர்கள்: எத்தனை மகத்தானவர்கள் இவர்கள்.

''ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன் ஆனால், உயிரினும் உன்னதமானது எமது சுதந்திரம், "எமது உரிமை, எமது கௌரவம்'' என்ற எமது தலைவரின் கூற்றுக்கு இவர்கள் தங்களை வரைவிலக்கணம் ஆக்கிக்கொண்டார்கள்.

போர் முனைகளிலே நாம் சந்தித்த ஒவ்வொரு வெற்றிகளின் போதும், அந்த வெற்றிகளுக்காக இலட்சிய வெறியோடு போராடிய எத்தனை இரத்தக்கனிகளை நாம் பறிகொடுத்து விட்டோம். தங்களை நினையாமல் தமிழீழத்தை நினைந்தவர்கள். தங்கள் வாழ்வை விட தமிழீழத்தின் விடுதலையை நேசித்தவர்கள். கொளுந்துவிட்டெரியும் தமிழீழ விடுதலை நெருப்புக்கு எத்தனை பேர் தங்களை எண்ணையாக ஊற்றிக்கொண்டார்கள்.

அன்பிற்கினிய தமிழீழ மக்களே!

எமது புரட்சி இயக்கத்தின், புனித இலட்சியமான சுதந்திர, சமதர்ம தமிழீழம் மீட்க விலையாகச் சென்றுவிட்ட எங்கள் வரலாற்று நாயகர்களை நினைவுகூரும் தமிழீழ மாவீரர்நாளாக, போர் முனையிலே முதன் முதலில் களப்பலியாகிய லெப்ரினன் சங்கரின் நினைவு நாளான "கார்த்திகை 27" ம் திகதியை எமது இயக்கம் பிரகடனப்படுத்தியது.

அந்த மாவீரர் நாளில்...

தமிழீழத் தனியரசுக்கு இடப்பட்ட உறுதியான அடிக்கற்களாக தங்களையே புதைத்தவர்களை நினைவு கூருவோம்.

தமிழீழ மண்ணின் மலர்வுக்காக, தமிழீழ மக்களின் சுதந்திரத்துக்காக, தமிழீழக் குழநதைகளின் சுபீட்சத்துக்காக கல்லறைகளாகிப் போனவர்களை நினைவு கூருவோம்,

எமது இனத்தின் இனி வரும் சந்ததிக்கு, எங்கள் சுதந்திர வீரர்களின் வரலாற்றைக்கூறுவோம். மலரப் போகின்ற தமிழீழத்தைத் தாங்கி நிற்க உறுதியான தூண்களை உருவாக்குவோம்.

என்றென்றும் அணையாமல் எங்கள் ஆன்மாவில் எரிந்து கொண்டிருக்கும் அந்த தியாக தீபங்களுக்கு உளமார்ந்த நினைவுகளுடன் வீரவணக்கம் செலுத்துவோம்.



பகீன்

### பகீன் (செல்வம்)
(அ. பகீரதன்)
மண்டைதீவு

எமது இயக்க வரலாற்றில "சயனைட்" அருந்தி வீரமரணமடைந்த முதற்புலி 18.05.1984 அன்று வல்வெட்டித்துறையில் சிறிலங்கா இராணுவம் சுற்றிவளைத்து கைது செய்தபோது வீரமரணமடைந்தார்.

# தமிழீழத்தில் முஸ்லிம்கள்

தமிழீழம் ஓர் மத சார்பற்ற நாடாகும். ஆனால் அங்கு எல்லோருக்கும் மத சுதந்திரம் உண்டு. அதேவேளை தமிழீழத்தில் மத வெறியர்களுக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

இலங்கையில் வாழும் தமிழ் பேசும் முஸ்லிம்கள் தனிச்சிறப்புடைய மதக் கலாச்சார பண்புகளைக் கொண்ட இனக்குழு என்பதனையும், தமிழீழத்தில் வாழும் முஸ்லிம்கள் முழுமையான உரிமையுடன் வாழ வேண்டும் என்பதையும் எமது அமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளது.

இன்று முஸ்லிம்கள் தமிழீழப் போராட்டத்திற்கு எதிராகச் செயற்படுகிறார்கள். தமிழீழப் போராட்டத்திற்கெதிராக முஸ்லிம்களைச் செயற்பட வைப்பதில் சிறிலங்கா அரசும் ஓரளவு வெற்றி பெற்றுள்ளது.

தமிழர்களையும், முஸ்லிம்களையும் பிரித்தால் தமிழீழப் போராட்டத்தை அழிப்பது சுலபம் என சிறிலங்கா நினைக்கின்றது.

தமிழீழப் போராட்டம் அழிக்கப்பட்டால் முஸ்லிம்களின் உரிமைக்கான குரலும் அழிந்து போகும் என சரியாக சிறிலங்கா கணித்து செயற்படுகின்றது.

கிழக்கில் இருந்து கிழக்கு வாழ் முஸ்லிம் மக்களின் உரிமைக்காக போராடப் போவதாக உருவாக்கப்பட்டது முஸ்லிம் காங்கிரஸ்.

ஆனால் அதன் தலைமையின் நலன் முழுவதும் சிறிலங்காவில் (கொழும்பில்) தங்கியிருக்கின்றது. அவர்களது குறுகிய வழியில் பதவிகளை, தலைமையை பெறும் எண்ணத்தையும் கொழும்பில் தங்கி நிற்கும் நிலையையும் பயன்படுத்தி தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரிப்பதில் சிங்கள அரசு வெற்றி கண்டுள்ளது. தமிழீழத்தில் முஸ்லிமகளின் நிலைப்பாடு குறித்து ஓரளவு பார்ப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

சிறிலங்காவிலோ, தமிழீழத்திலோ முஸ்லிம்கள் இதுவரை தமது உரிமைகளுக்காக போராடியது கிடையாது.

சிறிலங்காவால் தமிழர்களும், முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டார்கள்.

தமிழர்கள் ஒடுக்கு முறைக்கெதிராகப் போராடினார்கள். ஆனால் முஸ்லிம்களோ தமிழர், சிங்களவர் என்ற முரண்பாட்டைப் பயன்படுத்தி வாழ முயன்றார்கள்.

தாங்கள் தமிழர்களும் அல்ல, சிங்களவர்களும் அல்ல, முஸ்லிம்கள் எனவும், அராபியர்கள் எனவும் இனம் காண முயன்றார்கள்.

அதன் மூலம் சிங்கள தேசத்திடம் அற்ப சலுகைகளை பெறலாம் என நம்பினார்கள் சில சலுகைகளையும் பெற்றார்கள்.

உண்மையில் இத்தீவில் வாழும் முஸ்லிம்களில் 95% மானோர் தமிழர்கள்.

இங்கு வாழும் முஸ்லிம் மக்களின் வாழ்க்கை முறையில் எத்தகைய அராபிய கலாச்சாரத்தையும் காணமுடியாது.

ஒரு சிலரைத் தவிர வேறு யாருக்கும் அரபு மொழி தெரியாது. அவர்கள் பாரம் பரியமாக வாழ்ந்த எந்த ஊருக்கும் அரபுப் பெயர் கிடையாது.

இன்று சிறிலங்காவிலும், தமிழீழத்திலும் முஸ்லிம்கள் தமிழ் பேசுகின்றார்கள்.

இதற்கு முக்கிய காரணம் இவர்கள் கலாச்சாரமே. முஸ்லிம் பெண்கள் வெளியே சென்று மற்றைய சமூகத்தினரோடு கலந்து வாழாததால் வீட்டு மொழி, தாய் மொழித் தமிழ் தொடர்ந்து பிள்ளைகளால் பேசப்படுகின்றது.

இப்படியாக தமிழ் மொழி சிறிலங்காவில் அழியாமல் காப்பாற்றப்பட்டது. ஆனால் அரபு மொழி பேணப்படவில்லை.

இவை முஸ்லிம்கள் தமிழர்கள் என்பதை தெளிவாக எடுத்துக் காட்டப் போதுமானவை.

சிங்களவர்களிடம் சலுகைகளைப் பெறுவதற்காக முஸ்லிம் மக்கள் தமது வரலாற்றை மறைத்து நிற்பதை நாம் பார்க்கிறோம்.

கொழும்புத் தலைமைகள் அல்லது அங்கு வர்த்தக, மற்றும் நலன்களைக் கொண்ட தலைமைகளே, முஸ்லிம் மக்களை வழி நடாத்தும் பள்ளி வாசல்களைக் கட்டுப்படுத்துகின்றன.

மார்க்கம் என்பதன் பெயரால் அறியாமையில் வாழும் பல முஸ்லிம் மக்கள் இத் தலைமைகளால் பிழையாக வழிநடாத்தப்படுகின்றார்கள்.

33% முஸ்லிம் மக்கள் வாழ்ந்த புத்தளம் இன்று சிங்களவர்களிடம் பறிபோயிற்று.

46.1% முஸ்லிம்கள் வாழ்ந்த அம்பாறை மாவட்டத்தில் 1732 ச. மைலில் 1200 ச. மைலுக்கு மேல் சிங்களவர்களிடம் பறிபோயிற்று.

விகிதாசார அடிப்படையில் தேர்தல் என்பதின் பெயரால் முஸ்லிம் மக்களின்பிரதிநிதித்துவம் குறைக்கப்பட்டது.

முஸ்லிம்களிடம் இருந்து வர்த்தகம், திட்டமிட்டு சிங்களவர்களால் கைப்பற்றப்பட்டது.

இதற்கு ஓர் சிறந்த உதாரணம். புத்தளத்தில் பழைய பேருந்து நிலையத்தில் முஸ்லிம் மக்களின் வர்த்தகத்தை உடைக்க புதிய பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு அங்குள்ள கடைகள் சிங்களவருக்கு கொடுக்கப்பட்டமையாகும்.

இதை எதிர்த்த முஸ்லிம்களை புத்தளம் பெரிய பள்ளிவாசலுக்குள் வைத்து சிங்களப் படை சுட்டுக் கொன்றது. இவற்றை எதிர்த்து முஸ்லிம்கள் போராடவில்லை. பதிலாக, முஸ்லிம்களின் உரிமைகளையும் பாதுகாக்கக்கூடிய தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அற்ப சலுகைகளுக்காக சிங்கள அரசுகளுடன் சேர்ந்து அழிக்க முனைகின்றனர்.

தமிழீழப் போராட்டத்தால் கிழக்கில் 50,000 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்படுவது தடுக்கப்பட்டது.

விகிதாசார அடிப்படையில் வேலை வாய்ப்பு, பதவி உயர்வு என சில சலுகைகளை சிறிலங்கா வழங்க முன்வந்தது.

முஸ்லிம்கள் தமது உரிமை பற்றிப் பேசும் பலத்தைப் பெற்றனர்.

இப்போராட்டத்தோடு இணைந்து நின்று போராடாமல், போராட்டத்திற்கு எதிராகவே முஸ்லிம் மக்கள் செயற்பட்டனர்.

1983ல் இருந்து தமிழீழப் போராட்டம் கூர்மை அடையத் தொடங்கியதும்,

தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் பிரித்து அழிக்கும் திட்டத்தை சிறிலங்கா செயற்படுத்தத் தொடங்கியது.

தமிழர், சிங்களவர் முரண்பாட்டில் வாழ நினைக்கும் முஸ்லிம்களை சிறிலங்கா பயன்படுத்தியது.

முஸ்லிம் ஊர்காவல் படைகளை உருவாக்கியது. தனது கைக்கூலிகளைக் கொண்டு தமிழ், முஸ்லிம் சமூகக் கலவரங்களைத் தூண்டியது.

விசேட அதிரடிப்படை, முஸ்லிம் ஊர்காவற் படையின் துணைப்படையுடன் பல தமிழ் கிராமங்களில் கிராமியப் படுகொலைகளை நடாத்தியது.

தமிழ்க் கிராமங்களில் இருந்து விரட்டப்பட்ட தமிழ் மக்கள் குறைந்த விலைக்கு தமது நிலங்களை விற்றனர், அல்லது விட்டுச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

சிறிலங்கா எதிர்பார்த்தது போல தமிழ், முஸ்லிம் மக்களின் உறவு நிலை உடைக்கப்பட்டது.

சிறிலங்காப் படையில் அல்லது காவல் துறையில் சேரும் தமிழர்கள் துரோகிகளாக கருதப்பட்டதால் தமிழர்கள் அதில் சேர்வதைத் தவிர்த்தனர்.

ஆனால் முஸ்லிம்கள் தாம் தனித்துவமானவர்கள் எனக் கூறிக்கொண்டு அதில் சேர்ந்தனர். இந்த முரண்பாட்டையும் சிறிலங்கா பயன்படுத்தத் தவறவில்லை.

தமிழ், முஸ்லிம் மக்களின் உறவு நிலை மிகப் பாதிப்படைந்த நிலையில் நாம் முஸ்லிம் மக்கள் சார்பாக ஓர் வேலைத் திட்டத்தை 21.4.1988ல் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியூடாக முன் வைத்தோம்.

முஸ்லிம்கள் ஒன்றிணைந்த தாயகத்தில் 30% குறைவில்லாத வகையில் மாகாண சபையில் பிரதிநிதித்துவம் பெறவும், அமைச்சரவையில் இடம் பெறவும் உரித்துடையவர்கள்.

எதிர்கால காணிப் பங்கீடு முஸ்லிம்களுக்கு கிழக்கு மாகாணத்தில் 35% குறைவில்லாத வகையிலும், மன்னார் மாவட்டத்தில் 30% குறைவில்லாத வகையிலும், வடமாகாணத்தின் ஏனைய பகுதிகளில் 5% குறைவில்லாத வகையிலும் இருக்க வேண்டும்.

முஸ்லிம் மக்களுக்கு இஸ்லாமிய பல்கலைக் கழகம் நிறுவப்படும்.

தமிழீழத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் வாழும் முஸ்லிம்களின் விகிதாசாரத்தின் படி பொதுத்துறை வேலை வாய்ப்புக்கான உரிமையை முஸ்லிம் மக்கள் கொண்டிருப்பர்.

முஸ்லிம் மக்களினது தனித்துவத்தின் உரிமைகள், அக்கறைகள் என்பவற்றை பாதிக்கக்கூடிய எதுவித சட்டவாக்கங்களும் அவற்றிற்கு முஸ்லிம் பிரதிநிதிகளின் 3/4 பெரும்பான்மையினர் சார்பாக வாக்களித்தாலன்றி தமிழீழத்தில் நிறைவேற்றப்படலாகாது என்னும் வகையில் பல விடயங்களில் இணக்கம் கண்டோம்.

ஓர் சுமூகமான சூழ்நிலை உருவாகத் தொடங்கியது.

முஸ்லிம் மக்கள் மனதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தினால்தான் தமது நிலங்களும் உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்ற உணர்வு வளரத் தொடங்கியது.

பல வழிகளில் நாம் முஸ்லிம் மக்களை அணுகிப்பேசினோம். சாதாரண முஸ்லிம் மக்கள் உண்மையைப்புரிந்து கொண்டு போராட்டத்தை ஆதரிக்கும் செயலில் இறங்கத் தொடங்கினர்.

கொழும்பில் தங்கி நிற்கும் முஸ்லிம் தலைமைகள் தமது தலைமைக்கு ஆபத்து வருவதை உணர்ந்து கொண்டனர்.

தமது நீண்டகால திட்டங்கள் உடைந்து போவதைக் கண்டது சிறிலங்கா.

தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்து தமிழ், முஸ்லிம் மக்கள் உறவை, தமது குறுகிய நலனுக்காக உடைக்க வேண்டிய அவசியம், இவர்கள் எல்லோருக்கும் ஏற்பட்டது.

முஸ்லிம் மக்களுக்கு பாதுகாப்பு என்னும் பெயரில், இந்தியப்படையுடனும், பின்னர் சிறிலங்காவுடன் சேர்ந்த முஸ்லிம காங்கிரஸ் ஓர் சமூக விரோதக் கும்பலை, முஸ்லிம் மத வெறியை வளர்த்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முஸ்லிம் உறுப்பினர்களை, ஆதரவாளர்களை கொலை செய்தனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக அராபிய நாடுகளில் பொய்ப் பிரச்சாரங்களை கட்டவிழ்த்து விட்டன.

விடுதலைப் புலிகள் முஸ்லிம்களை கொல்கின்றார்கள் எனக் கூறி. பணம் திரட்டி தமது சுக போக வாழ்க்கைக்கு பயன்படுத்தினர்.

தமிழீழப் போராட்டத்திற்கு எதிராகசெயற்பட்டுக்கொண்டு, தமிழீழப் போராட்ட வெற்றிகளில் பங்கு வேண்டும் என நியாயமற்ற தீர்வுகளை நிபந்தனைகளோடு வைத்தனர்.

மீண்டும் தமிழீழ-சிறிலங்காப் போர் ஆரம்பித்த போது, சிறிலங்காவுடன் சேர்ந்து பெருமளவில் தமிழ் மக்களைக் கொலை செய்தனர்.

பல பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டனர்.

கிழக்கில் இவர்களின் செயலால் 4 இலட்சம் தமிழ் மக்கள் அகதிகள் ஆகினர். கொல்லப்பட்ட 4000 ற்கும் மேலான மக்களில் 2000 ற்கும் மேற்பட்டோர் முஸ்லிம்களால் கொல்லப்பட்டனர்.

அம்பாறையில் 80,000 ற்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் கொலை செய்யப்பட்டு விரட்டப்பட்டனர். பல கிராமியப் படுகொலைகள் நடந்தன,

வடக்கில் இருந்த 60,000 முஸ்லிம் மக்களில் 30,000 பேர், போர் ஆரம்பித்ததும் சிறிலங்காவுக்கு பாதுகாப்புத் தேடிச் சென்றனர்.

மிகுதிப் பேர், அவர்கள் பாதுகாப்புக் கருதி அனுப்பி வைக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் ஒரு முஸ்லிம் கூட கொல்லப்படவுமில்லை. ஒரு முஸ்லிம் பெண்கூட பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கும் கிழக்கும் இணைந்த நிர்வாகத்தில் கிழக்கில் 33% இருக்கும் முஸ்லிம் மக்களின்வீதம் 18 வீதமாக குறைந்துவிடும். இணைந்த நிர்வாகத்தால் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது.

இணைந்த நிர்வாகத்தில் வடக்கில் 4.7% இருக்கும் முஸ்லிம்கள் வீதம் 18வீதமாக உயருவதுபற்றியும்,இலங்கைத்தீவில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் வீதம் 2·1 ஆகும் இது இணைந்தநிர்வாகத்தில் 18% உயருவதையும் யாரும் பேசுவதில்லை.

அம்பாறையில் இருக்கும் 1,01,754 முஸ்லிம் மக்கள் குறித்து பெரிதும் பேசும் முஸ்லிம் தலைமை கண்டியில் வாழும் 1,25,646 முஸ்லிம்கள் குறித்தும் கொழும்பில் வாழும் 1,68,956 மக்கள் குறித்து எதுவும் பேசுவது கிடையாது.

உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவு தராமல் அதைக் குழப்பும் இவர்களது தன்மை இதனால் தெளிவாகும்.

முஸ்லிம் மக்களின் உரிமைக்காக தமிழர்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வந்துள்ளனர்.

1976ம் ஆண்டு மாசி 2ம் நாள் புத்தளம் பெரிய பள்ளி வாசலில் சிறிலங்கா காவற்துறையால் 7 முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டபோது, யாருமே அது குறித்துப் பேசாத போது தமிழர்கள் தான் அது குறித்துப் பேசினார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழத்தில் உள்ள, தமிழ் மக்களுக்காக மட்டுமல்ல முஸ்லிம்களுக்காகவும் தான் போராடினார்கள்.

தமிழ் மக்களோடு, தமிழீழ விடுதலைப் புலிகளோடு சேராது முஸ்லிம் மக்கள் போராட்ட காலத்தில் பிரிந்து நின்றதன் மூலம் வரலாற்றுத் தவறையும்.

தமிழீழ விடுதலைப் புலிகளையும், தமிழ் மக்களையும் அழிப்பதன் மூலம் வரலாற்றுத் துரோகத்தையும் செய்துள்ளனர்.

தாம் தமிழர் அல்ல, சிங்களவர் அல்ல என தனித்து நின்ற காலம் போய் இப்போது, தம்மை அராபியர்கள் என இனம் காண முயல்கின்றனர்.

இவர்கள் அராபியர்களும் இல்லை. சிங்களவர்களும் இல்லை. இவர்கள் தமிழர்கள்.

இவர்கள் தமது தவறைத் திருத்தாது தமிழ் மக்களுக்கு எதிராக, தமிழீழ போராட்டத்திற்கு எதிராக செயற்பட்டு சிங்கள தேசத்திடம் சலுகைகள் பெறும் எண்ணத்தை கைவிட வேண்டும்.

சிங்கள தேசம் இவர்களைப் பயன்படுத்திய பின் இவர்களை அழிக்கத்தயங்காது.

இந்த நிலை தொடருமாக இருந்தால் இலங்கைத்தீவில், தங்களது தனித்துவங்களை இழந்த ஒரு உதிரிகள் கூட்டமாகத்தான் முஸ்லிம்கள் வாழ வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படலாம்

**சொந்தக் குடும்பத்தின் பிரச்சனைகளையும் - நிகழ்வுகளையும் விட, சொந்த மண்ணின் பிரச்சனையும், நிகழ்வுகளும் பெரிதாகி விட்ட போது, திருக்கோணமலை மண்ணிலிருந்து போராட்டத்துக்குள் புகுந்த ஒவ்வொரு போராளியினது வாழ்க்கையும் - இப்படித்தான்.**




மேஜர் பவான்......

திருக்கோணமலை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றங்கள் மிக வேகமாகப் பரவிக் கொண்டிருந்த காலகட்டம் அது. சிங்கள மக்களுக்கு வேண்டிய அளவு உதவிகளை வழங்கியதுடன், ஆயுதங்களையும் வழங்கி இராணுவப் பாதுகாப்புடன் அங்கே குடியேற்றினார்கள். புதிய, புதிய சிங்களக் கிராமங்கள் எழுந்தன. மட்டக்களப்பு மாவட்டத்தையும், திருக்கோணமலை மாவட்டத்தையும் பிரிப்பதற்காக சேருவலவிலும் அதற்கு அண்டிய பகுதிகளிலும் பெருமளவில் சிங்களவரைக் குடியேற்றிக் கொண்டிருந்தார்கள்.

இக் குடியேற்றத்தின் முதுகெலும்பான அல்லை கந்தளாய் வீதியில் பலமுறை நிலக்கண்ணிகள் அதிர்ந்து விட்டன. ஆனாலும் குடியேற்றங்கள் நின்றபாடாக இல்லை. இந்நேரத்தில் தான் ஒரு நாள், சித்தாறு எனும் கிராமத்தில் கஜேந்திரனின் தலைமையில் பவானும், அவனது தோழர்களும் காத்திருந்தார்கள். சித்தாறு தமிழ்க் கிராமந்தான். ஆனால் இன்று ஆட்களற்று வெறுமையாக......, எங்கள் தேசத்தின் மீது கும் ஆக்கிரமிப்புப் பாதங்களை பதிப்பதற்காக வரும் எதிரிகளுக்காக அவர்கள் காத்திருந்தார்கள்.

விடிந்து சிலமணி நேரங்களின் பின்......, இராணுவ ட்றக் வண்டி ஒன்று சேருவலவை நோக்கி வந்துகொண்டிருந்தது. உள்ளே ஆயுதபாணிகளான சிங்கள ஊர்காவல் படையினரும், இராணுவத்தினரும் இருந்தார்கள், எல்லாமாக 72 பேர். இராணுவ வண்டி மிகநெருங்கியதும் வெடியோசை முழங்கியது, அச்சத்தும் சேருவலவை மட்டுமல்ல 2ம்கொலனி, கல்லாறு, நீலாப்பொல, தெகிவத்தை என்று எல்லாச் சிங்கள கிராமங்களையுமே உலுக்கியது, இது எரிமலை; இங்கு அந்நியர்கள் எவரும் நிரந்தரமாகி விட முடியாது என விளக்கியது.

இப்படித்தான், சிங்களக் குடியேற்றங்கள் பரவிய இடங்களில் எல்லாம் தாக்குதல்கள் மீண்டும் மீண்டும் நடந்தன, பல குடியேற்றக் கிராமங்கள் அகற்றப்பட்டன, ஆயுதம் தாங்கிய குடியேற்றவாசிகள் அடித்துத் துரத்தப்பட்டார்கள். அவ்விடங்கள் ஒரு யுத்தமுனையாகவே இருந்தது. அந்த மண்ணில் பிறந்து சிங்கள ஆக்கிரமிப்பாளர்களால் அங்கிருந்து விரட்டப்பட்டுவிட்ட பவானும் புலிகளுடன் இணைந்து அங்கே போராடினான்.

★ ★ ★

ஆண்டாண்டு காலமாக தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த மூதூரின் தென்மேற்கு பகுதியிலிருந்து தமிழர்கள் விரட்டப்பட்டார்கள். புதிய சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு சேருவல பிரதேசம் உருவாக்கப்பட்டது. பின்பு புனிதப் பிரதேசமாக பிரகடனப் படுத்தப்பட்டது. இவ் ஆக்கிரமிப்பினால் பல தமிழ்க்கிராமங்கள் சிங்கள மயமாகியது. சேருவலவை சுற்றி 2ம் கொலனி, கல்லாறு, நிலாப்பொல, தெகிவத்தை என பல சிங்களக் குடியேற்றக் கிராமங்கள் தோன்றின. இவைகட்கு மத்தியில் தான் 3ம் கொலனியும், இன்னும் சில தமிழ்க் கிராமங்களும் இருந்தன.

சுற்றிவரச் சிங்களக் குடியேற்றக் கிராமங்களுக்கு இடையே இருந்த 3ம்கொலனியில் தான் பவான் பிறந்தான். இரு மூத்த சகோதரிகள். இவன், இரு தங்கைகள். பவான் சிறு வயதிலேயே தன் தந்தையை இழந்து விட்டான். அதன் பின் அவனது குடும்பம் வறுமையில் வாடியது.

இளவயதிலேயே பவான் தன் குடும்பச் சுமையை தாயுடன் பகிர்ந்து கொண்டான். ஏழ்மையும் பசியும் தான் அந்தக் குடும்பத்திற்குள் ஒரு பாசப் பிணைப்பினைக் கட்டி எழுப்பியது. ஒருவருக்கொருவர் பிரிக்க முடியாத பந்தம். ஏனோ தெரியவில்லை தன் அம்மாவும், தங்கைகளும் கண் கலங்குவதை அவனால் தாங்க முடிவதில்லை.

கிராமத்து வயல் நிலங்களில் தன் தாய் வேலை செய்வதைப் பார்த்து விம்முவான். அம்மா, இனி நீ வேலை செய்யவேண்டி இராது என அவனது மனம் பேசிக்கொள்ளும்.

தன் தங்கைகளின் மேனியில் வறுமை குடியேறி - அவர்களும் வேலைக்கு...... அவனால் பொறுக்க முடிவதில்லை.

அவர்களுக்காக அவன் இருந்தான். எதையுமே தாங்க எதையுமே இழக்க...

ஆனால், 1985 ல்

மூதூரின் பல தமிழ்க் கிராமங்கள் சிங்களக் காடையர்களினால் அழிக்கப்பட்டன. காலங்காலமாக தாம் வாழ்ந்த மண்ணிலிருந்து தமிழர்கள் மிருகத்தனமாகத் துரத்தப்பட்டார்கள். சிங்களக் குடிகள் மிக வேகமாகப் பரவத் தொடங்கின. 3ம் கொலனியிலும் பல தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். பல இளம் பெண்கள் ஊர்காவல் படையினரால் இழுத்துச் செல்லப்பட்டார்கள்.

எந்தவொரு மனிதனைப் பொறுத்த வரையும் அவன் வாழும் சமூகம் அவனது வாழ்வுப் பாதையை தீர்மானிக்கிறது. **சாதாரணமான கிராமிய வாழ்வை வாழ விரும்பிய பவானை ஒரு போராளியாக மாற எங்கள் தேசத்தின் நிலைமைகள் நிர்ப்பந்தித்தன, தன் தாயை, தன் தங்கைகளை அவர்களை மாதிரி ஆயிரம் ஆயிரம் சகோதரிகளை காப்பதற்காக அவன் ஆயுதம் ஏந்த வேண்டி இருந்தது.**

பவான் ஒரு போராளியாக மாறிய பின்பு தன் மண்ணை மீட்பதற்காக இரவு பகலாகச் செயற்பட்டான். அவனும் அவனது தோழர்களும் - தொடர்ந்து இடைவிடாத தாக்குதல்களின் மூலம் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களை நிம்மதியாக, அமைதியாக வாழவிடவில்லை. ஆனால் ஒரு திட்டமிடப்பட்ட பெருங்குடியேற்றத் திட்டத்திற்கெதிராகவும் அதன் வலுவான பாதுகாப்பு இராணுவத்திற்கெதிராகவும் அவர்கள் போராடவேண்டி இருந்தது. சிங்கள குடியேற்றவாதிகளின் மத்தியில் சீர் சயமற்ற வாழ்வு முறையை ஏற்படுத்தி அவர்களை வெளியேற்ற வேண்டி இருந்தது. எம்மவர்கள் நடாத்திய ஒவ்வொரு தாக்குதல்களும் ஒரு சிங்களக் கிராமத்தை அகற்றி இருக்கும். அல்லது ஒரு புதிய குடியேற்றத்தை நிறுத்தி இருக்கும்.

1986 -

பவான், மேஜர் கணேஸ் அண்ணனுடன் இணைந்து சிறிலங்கா படையினருக்கெதிரான பல தாக்குதல்களில் கலந்து கொண்டான். கடவான வீதியில் கடற்படையினரின் ட்றக் வண்டி மீதான கண்ணிவெடித் தாக்குதலும், எமது காவலைமறிகட்டைப் பறிச்சான் பகுதிக்குள் நுழைய முயன்ற சிறிலங்கா இராணுவத்தினரை விரட்டியடித்த 5 நாள் யுத்தத்திலும் இவன் மேஜர் கணேசுடன் இணைந்து கொண்டான். அதன் பின்பு மேஜர் கஜேந்திரனுடன் இணைந்து பல தாக்குதல்களில் பங்குபற்றினான்.

காலம் அவனை ஒரு பொறுப்பு வாய்ந்த தளபதியாக வளர்த்தது. முதலில் ஒரு தாக்குதல் அணிக்கு தலைமை வகித்துக்கொண்டான். அக்காலத்தில் (1987) 3ம் கொலனியில் சிறிலங்கா படையினர் மீது தாக்குதலை நடாத்தி இரு ஆயுதங்களையும், திருக்கோணமடுவில சிறிலங்கா இராணுவத்தினர்மீது தாக்குதலை நடாத்தி இரு ஆயுதங்களையும் கைப்பற்றினான்.

அப்பொழுதெல்லாம், ஆட்களற்று வெறிச்சோடிப் போன அவனது கிராமத்தின் வீதிகளில் நடக்கையில் அவன் கூறுவான்,

''மச்சான்! இந்த மண்ணில தான் நான் பிறந்தனான்,''

''இந்த, வயலில் தான் நான் விதைச்சனான்'' அவனது கண்களும் கைகளும் அவற்றை நோக்கி நீளும்.

''ஆனால், எனக்கு ஒரு ஆசை, இந்த விடுதலைப் போராட்டத்தில நான் சாகிறதாக இருந்தால் - இந்த மண்ணில தான் ஒரு சண்டையில சாகவேணும்.''

இப்படித்தான், எங்கள் போராளிகளின் கனவுகளும் எத்தியாசமானவை. **ஏனெனில் அவர்கள் இழப்புக்களையும் சாவையும் நெஞ்சில் நிறுத்திப் போராடும் உன்னதமான போராளிகள்**

வரலாற்றில், எங்கள் விடுதலைப் போராட்டத்தில் ஒரு மாறுதல் நிலை. எங்கள் சுதந்திரத்தை நாம் வென்றெடுப்பதற்காக இந்தியப் படைகளிற்கெதிராகவும் நாம் போராட வேண்டி இருந்தது.

பவானும் பல முனைகளில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கெதிரான தாக்குதல்களை நடத்தினான். இதில் 1988 இலும் 1989இலும் 3ம் கொலனியில் நடாத்திய தாக்குதல்கள் குறிப்பிடக்கூடியவை. 1989 இல் நடந்த தாக்குதலில் இரு இந்திய சிப்பாய்களை கொன்று அவர்களது இரு ஆயுதங்களையும் கைப்பற்றினான்.

1989 சித்திரையில் பவான் மூதூர் பிரதேச தளபதியாக நியமிக்கப்பட்டான். பின்பு தம்பலகாமப் பகுதிக்கு மாற்றலாகி அங்கும் பல தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டான்.

தம்பலகாமத்தில - 1989 மாவீரர்நாள விழாவை தேசத் துரோகிகள் இந்திய படையுடன் இணைந்து கலைக்க முயற்சிக்கையில் இரு தேசத்துரோகிகளை கொன்று அவர்களது ஆயுதங்களையும், நான்கு நாட்களின் பின்பு அதே இடத்தில் ஒரு இந்திய இராணுவ கப்டனை கொன்று அவனது ஆயுதத்தையும் கைப்பற்றினான், திருக்கோணமலையில் இந்தியப்படைகள் தம் இறுதித் தாக்குதலையும் இவனது அணிமீதே நடத்தினர். சூரங்கல்லில் நடந்த இந்த மோதலில் - இந்தியப்படை பலத்த இழப்பைக் கண்டது. அம்மோதலில் எமது தரப்பில் திலகர் என்ற வீர வேங்கை வீரமரணமடைந்தான்.

தமிழீழத்தை ஆக்கிரமித்திருந்த இந்தியப் படைகள் விலகியபின் - சிறிலங்காவின் படைகள் தம் பயங்கரவாதத்தை மீண்டும் தொடங்கிய நேரம், தமிழீழமெங்கும் பலத்த எதிர்ப்பினை சிறிலங்கா படைகள் சந்தித்தனர். பவானும் தனது தோழர்களுடன் இணைந்து பல இடங்களில் இராணுவத்தினருக்கு எதிராகப் போரிட்டான். கிண்ணியா பொலிஸ் நிலையம், இராணுவமுகாம், தம்பலகாமத்திற்குள் நுழையும் இராணுவத்தினருடன்... என போர்கள் தொடர்ந்தன

எமது முற்றுகையிலிருந்து மூதூர் இராணுவ முகாமை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்த சிறிலங்கா இராணுவ கொமாண்டோப் படையின் முதலாம் அணியை கட்டைப்பறிச்சான் பாலத்தடியில் மறித்து எம்மவர்கள் தாக்குதல் நடாத்தியபோது- அத்தாக்குதலில் பவான் பாலத்தின் ஒரு பகுதிக்கு பொறுப்பாக தாக்குதற் குழுவிற்கு தலைமை வகித்து, தன் சகதோழர்களை உற்சாகப்படுத்தி, இயக்கி அத்தாக்குதலின் வெற்றிக்கு வழி வகுத்தான். அத்தாக்குதலில் 62 இராணுவத்தினர் கொல்லப்பட்டு. பெருமளவிலான ஆயுதங்களும், கைப்பற்றப்

(11 -ம் பக்கம் பார்க்க )



## மேஜர் பவான்

*சாந்தலிங்கம் நாகேந்திரம்*

( மூதூர் )

வீர மரணம்: 3 - 7 - 1990

# பரிபூரண நிர்வாக உருவாக்கத்தை நோக்கி

**சுதந்திரத் தமிழீழத்தை அமைப்பது விடுதலைப் புலிகளின் அரசியல் - இராணுவ இலட்சியம். இந்த இலட்சியத்தை அடைவதில் எமது இயக்கம் இதுவரை சாதித்தது என்ன? எமது இலட்சியப் பயணத்தில் நாம் எந்தக் கட்டத்தில் நிற்கிறோம்? தமிழீழத் தனியரசை எப்படி, எந்தப் படிமுறைகளில் அமைப்பது? இன்று தமிழீழத்தில் பலராலும் எழுப்பப்படும் வினாக்கள் இவை. இந்த வினாக்களுக்கு விடை தேடுவதே இக்கட்டுரையின் நோக்கம்.**

### இலட்சிய உறுதியுடன் நாம் போராட்டத்தை முன்னெடுத்தோம்

சுதந்திரமான இறைமையுடைய தமிழீழத் தனியரசை அமைப்பதுதான் விடுதலைப் புலிகளின் நோக்கம். இந்த இலட்சியத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் அன்றுதொட்டு இன்றுவரை இரும்பையொத்த உறுதியுடன் செயற்பட்டுவருகிறது. இந்த இலட்சியத்தை அடையவே ஆயுதமேந்திப் போராடி வருகிறது. இந்த இலட்சியத்திற்காகவே கிட்டத்தட்ட இரண்டாயிரத்து முன்னூறு (2300) போராளிகள் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர். இந்த இலட்சியப் பயணத்தில் எமது இயக்கம் எதிர்கொண்ட ஆபத்துக்கள், நெருக்கடிகள், சவால்களை இங்கு எழுத்தில் விபரிக்க முடியாது. இந்த இலட்சியத்திலிருந்து எம்மை திசை திருப்பச் செய்வதற்கு எத்தனையோ சக்திகள், எத்தனையோ முயற்சிகளை எடுத்தன. அரசியல் ரீதியாக, ராஜதந்திர ரீதியாக, இராணுவ ரீதியாக எம்மீது திணிக்கப்பட்ட அழுத்தங்கள் பல. குறிப்பாக இந்தியாவின் தலையீடு எமக்கு இமாலயப் பிரச்சனைகளைக் கொடுத்தது. இறுதியாக இந்தியாவின் பலம் மிக்க இராணுவத்தையும் களத்தில் எதிர்கொண்டு போரிட்டோம். எனினும் இத்தகைய நெருக்கடிகளை எதிர்கொண்டு எமது இயக்கம், தனது இலட்சியத்தில் அணுவளவுகூட விட்டுக்கொடுக்கவில்லை. ஆனால் தமிழீழத்தைத் தமது அரசியல் இலட்சியமாக வரித்துக்கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியும், மற்றைய ஆயுதக் குழுக்களும் இந்திய - சிறீலங்கா அரசுகளின் அழுத்தத்திற்குப் பயந்து, ஆசை வார்த்தைகளை நம்பி, தனியரசுக் கோரிக்கையை காற்றில் பறக்கவிட்டனர். இன்று இந்தக் கட்சிகளும், குழுக்களும் எதிரியின் கைப்பொம்மைகளாக தமிழினத் துரோகிகளாக, எதிரியின் பாசறையிலிருந்து செயற்படுகின்றன. அரசியற் பேச்சுவார்த்தை, ராஜதந்திர நாடகங்கள் எல்லாம் ஒரு விடுதலை இயக்கத்தின் இலட்சியத்தை மழுங்கடிக்கச் செய்யும் சூத்திரதார முயற்சிகள் என்பது எமக்குத் தெரியும். ஆயினும் இந்த ஆபத்தான நீரோட்டங்களில் எதிர்நீச்சல் போட்டு எமது இயக்கம் தனது இலட்சியப் பாதையை மேலும் பலப்படுத்தியிருக்கிறது.

நீண்டகாலமாகவே தமிழீழ அரசியல் அரங்கில் பல கட்சிகள், பல இயக்கங்கள், பல ஆயுதக் கும்பல்கள் மக்களை குழப்பத்திலும், துன்பத்திலும் ஆழ்த்திவந்தன. ஆனால் விடுதலைப் புலிகளின் உறுதியான இலட்சியமும், தீர்க்கமான போராட்டமும் காரணமாக இன்று தமிழீழத்தில் ஒரேயொரு தேசிய விடுதலை இயக்கத்தின் பின்னால் மக்கள் அணிதிரண்டு நிற்கின்றனர். ஏனைய கட்சிகள், குழுக்கள் எல்லாம் இனம் காணப்பட்டு மக்களால் அந்நியமாக்கப்பட்டுள்ளன. **ஒரே தேசிய இயக்கம், ஒரே தேசிய இலட்சியம், ஒரே தேசிய மக்கள் என்ற வகையில் விடுதலைப் போராட்டத்தை நெறிப்படுத்தி, வடிவமைப்புக் கொடுத்து, முன்னேற்றப் பாதையில் வழிநடாத்திச் செல்கிறது எமது இயக்கம்.** இது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒரு அபாரமான சாதனை என்றே சொல்ல வேண்டும்.

# தமிழீழத் தனியரசு

### இராணுவ அமைப்பு ரீதியில் புலிகளின் பாரிய வளர்ச்சி

இராணுவ அமைப்பு ரீதியிலும், ஆயுதப் போராட்ட வழிமுறைகளிலும், இராணுவ சாதனைகளிலும் எமது இயக்கம் பாரிய வளர்ச்சிகண்டிருக்கிறது. 18 ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு சிறிய ஆயுதக் குழுவாக பிறப்பெடுத்து இன்று ஆசிய கண்டத்திலேயே பலம்மிக்க ஒரு தேசிய விடுதலை இராணுவமாக, ஒரு மக்கள் படையாக நாம் வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டிருக்கிறோம். காடுகளில் மறைந்திருந்து, கரந்தடிப் போரை நடாத்திவந்த புலிப் படை வீரர்கள் இன்று தமிழீழ தேசத்தின் பெரும் பகுதியை தமது இராணுவ - அரசியல் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதென்றால் அது ஒரு மாபெரும் வரலாற்று வளர்ச்சியை குறித்து நிற்கிறது.

எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது தாயகப் பூமியை படிப்படியாக எமது நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்து, தமிழீழ பிரதேச ஒருமைப்பாட்டை நிலைநிறுத்துவதுவே விடுதலைப் போராட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். இந்தக் குறிக்கோளை அடைவதில் நாம் குறிப்பிடத்தக்க வெற்றியைக் கண்டுள்ளோம். எனினும் பிரதேச கட்டுப்பாடு என்பது இன்னும் முழுமைபெறவில்லை. ஏனெனில் எமது எதிரியானவன் தமிழீழப் பிரதேசத்தின் ஒருமைப்பாட்டை துண்டாடும் வகையில் முக்கிய கேந்திர நிலைகளையும், பல மாவட்டத் தலைநகர்களையும் ஆக்கிரமித்து நிற்கிறான். எனினும் ஆக்கிரமிப்பாளன் தமிழீழ மண்ணை தனது முழுமையான கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரமுடியாது திண்டாடிக்கொண்டிருக்கிறான். வடக்குப் பிரதேசத்தில் மாவட்டத்திற்கு ஒன்றாக நிலைகொண்டிருக்கும் இராணுவ முகாம்களிலிருந்து வெளியேற முடியாத நிலைக்கு எதிரி தள்ளப்பட்டிருக்கிறான். தரைமார்க்கமாக நகர முடியாததால் ஆகாய, கடல் மார்க்க ஆயுத, உணவு விநியோகத்தில் எதிரியின் இராணுவம் தங்கியிருக்க வேண்டியுள்ளது. இதனால் இராணுவ, கடற்படை முகாம்கள் தவிர்ந்த முழுப் பிரதேசமும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

பூரணமான கட்டுப்பாட்டு பிரதேசங்களை அமைப்பதும், அப்பிரதேசங்களில் நிர்வாக இயந்திரத்தை உருவாக்குவதும் விடுதலைப் புலிகளின் அடுத்த கட்ட போர்முறைத் திட்டமாக அமையும். இந்தக் கட்டம் எமது விடுதலைப் போராட்டத்தை ஒரு உயர்ந்த படி நிலைக்கு கொண்டு செல்லும். தனியரசை அமைப்பதற்கு அத்திவாரமாகவும் இந்நடவடிக்கை அமையும்.

### தமிழீழ மக்களின் வரலாற்றுத் தீர்மானத்தை நடைமுறைச் சாத்தியமாக்கியது புலிகள் இயக்கம்

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு தேசம் (Nation) அரச அதிகாரத்தை (State Power) நிறுவிக்கொள்வதில் பல படிமுறைகள் உள்ளன. நீண்ட போராட்ட வரலாற்றில், படிப்படியாக தாய்மண்ணை மீட்டு, மீட்கப்பட்ட பிரதேசத்தில் ஆட்சி அதிகாரத்தை நிறுவி, முழுமையான பிரதேசக் கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவதன் மூலம் இது சாத்தியமாகிறது. வரலாற்று ரீதியாக தமிழீழ மக்கள் ஒரு தேசமாக, ஒரு தேசிய இனமாக அமைப்புப்பெற்றுள்ளனர். வரையறுக்கப்பட்ட ஒரு தாயகப் பூமி, ஒரு தனித்துவமான மொழி, கலாச்சாரம், பொருளாதார வாழ்வு, ஒரு தனித்துவமான நீண்ட வரலாறு - இவற்றையெல்லாம் கொண்ட ஒரு தேசிய சமுதாயமாக, ஒரு தேசமாக தமிழீழ மக்கள் அமையப்பெற்றிருக்கின்றனர். அந்நிய காலனித்துவ ஊடுருவலுக்கு முன்னராக தமிழ்த் தேசம் ஒரு அரசைக் கொண்டிருந்தது. அதாவது தமிழ்த் தேசம் தனக்கென ஒரு ஆட்சியதிகாரத்தைக் கொண்டிருந்தது. அந்நிய காலனித்துவம் இந்த ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி, இறுதியில் சிங்கள தேசத்திடம் தமிழரின் இறைமையை தாரைவார்த்து ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் தமிழ்த் தேசத்தை சிங்கள அரச அதிகாரத்தின்கீழ் கொண்டுவந்தது. சிங்கள அரசானது தமிழரின் தேசிய தனித்தன்மையை அழித்து, தமிழ் மக்களை இனரீதியாக ஒழித்துக்கட்ட முற்பட்ட பொழுதுதான் பிரிந்து சென்று தனியரசை நிறுவ தமிழீழ மக்கள் முடிவெடுத்தனர். சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழீழ மக்கள் மேற்கொண்ட இந்தத் தீர்மானத்தை நடைமுறைச் சாத்தியமாக்கி அதற்கு எதார்த்த அரசியல் வடிவம் கொடுக்க எமது இயக்கம் போராடி வருகிறது. தமிழீழத் தனியரசை அமைக்கும் எமது இலட்சியப் போராட்டத்தில் நாம் இன்று எந்தக் கட்டத்தில் நிற்கிறோம்?

### தமிழீழத் தனியரசின் மையக்கரு உருவாகி விரிவடைந்து வருகிறது

முதலில் அரசு என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். அரசு என்பது ஆட்சியதிகாரத்தைக் குறிக்கிறது. ஒரு ஆட்சியதிகார பீடத்தையும் அந்த ஆட்சியை செயற்படுத்தும் அமைப்புகளையும் கொண்டதாக ஒரு அரசு இயங்குகிறது. இந்த அரசமைப்பு பல வடிவங்களில் அமையலாம். சனநாயகம், சர்வாதிகாரம், இராணுவ ஆட்சி இப்படியாக.

ஒரு அரசுக்கு அத்திவாரமாக விளங்குவது ஒரு தேசம். ஒரு தேசம் இல்லாமல் அரசு இருக்கமுடியாது. ஒரு தேசம்தான் அரசை அமைக்க முடியும். ஒரு தேசம் அதாவது ஒரு தாயகப் பிரதேசம் அதில்வாழும் மக்கள் இனம், அம்மக்களுக்கென ஒரு ஆட்சியமைப்பு, இந்த ஆட்சியமைப்பை இயங்கவைக்கும் நிர்வாக அலகுகள், இராணுவம், பொலிஸ், நீதிமன்றங்கள் - இவற்றையெல்லாம் கொண்டதாக ஒரு அரசு அமைகிறது.

தமிழீழத்தில் இன்றைய நிலைமை என்ன? தமிழீழ தேசத்தில் சிங்கள அரச நிர்வாகம் சீர்குலைந்திருக்கிறது. அரச ஆட்சியதிகாரம் செயலிழந்திருக்கிறது. வடக்கு முழுவதிலும் கிழக்கில் பல பகுதிகளிலும் எதிரி இராணுவம் முகாம்களுக்குள் முடக்கப்பட்டிருக்கிறது. பொலிஸ் நிர்வாக இயந்திரமும், நீதிபரிபாலன சேவையும் ஸ்தம்பித்துள்ளன. மக்களின் அத்தியாவசிய சேவைகள் குறித்து விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் ஒரு சில நிர்வாக அமைப்புகள் மட்டும் இயங்குகின்றன.

**தமிழீழ தேசத்தில் சிங்கள அரச ஆட்சியதிகாரத்திற்குப் பதிலாக விடுதலைப் புலிகளின் ஆட்சியதிகாரம் நிலைநாட்டப்பட்டுவருகிறது. புலிகளின் கட்டுப்பாட்டின்கீழுள்ள பிரதேசங்களில் இந்த ஆட்சியதிகாரம் செயற்பட்டுவருகிறது. சிங்கள அரச அதிகாரம் செத்துக்கொண்டிருக்கிறது. அதே வேளை புலிகளின் அரச அதிகாரம் பிறப்பெடுத்துவருகிறது.** பிரபாகரனின் தலைமையிலான விடுதலைப் புலிகளின் மத்திய அதிகாரபீடம், மக்கள் படையாக உருவெடுத்திருக்கும் தமிழீழ தேசிய இராணுவம், அரசியல் கட்சியமைப்பு, மற்றும் பல்வேறு சிவில் நிர்வாக அமைப்புகளையும் நிறுவனங்களையும் கொண்டதாக விடுதலைப் புலிகளின் ஆட்சியதிகாரம் தமிழீழத்தில் விரிவடைந்துவருகிறது.

சுதந்திரத் தமிழீழம் அமைவதற்கான எதிர்கால படிமுறைகளை ஆராயும்பட்சத்தில் கீழ்க்கண்டவை முக்கியத்துவம் பெறுகிறது.

1. மக்கள் படையாக உருவெடுத்திருக்கும் தேசிய விடுதலை இராணுவத்தை விரிவுபடுத்தி, நவீனமயப்படுத்தி, மரபுவழி இராணுவமாக (Conventional Army) அமைத்தல்.

2. பூரண கட்டுப்பாடுடைய பிரதேசங்களை அமைத்து தமிழீழத் தாயகத்தின் பிராந்திய ஒருமைப்பாட்டை கட்டியமைத்தல்.

3. தமிழீழத்தில் தங்குநிலையற்ற, சுயபூர்த்தியுடைய பொருளாதார வாழ்வை உருவாக்குதல்.

4. தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையையும், அரசியல் சுதந்திரத்தையும், இறைமையையும் அங்கீகரிக்குமாறு இந்தியாவிலும் உலக நாடுகள் மத்தியிலும் பிரச்சாரம் செய்தல்.

இந்த நான்கு அம்சப் படிமுறைகளும் மேற்கொள்ளப்படும் உருப்படியான, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் — மையக் கருவாக வளர்ந்துவரும் தமிழீழ தனியரசுக்கு முழு வடிவம் கொடுக்கும்.

**தமிழீழத் தனியரசின் மையக்கரு உருவாகி வளர்ந்துவருகிறது. இது முழுவடிவம் பெறும்பொழுது, சுதந்திரத் தமிழீழம் பிறப்பது திண்ணம்.**

# ஒரு புலிவீரன் வீழ்கின்ற போது அவனது துவக்கு எழுகிறது...

நண்பனே!
நான் வருந்துவதெல்லாம்
மக்களின் விடுதலைக்காக
இந்த மண்ணின் மடியில்
சாகின்ற மகிழ்ச்சியை
இன்னுமொருமுறை பெறமுடியாதே!
என்பதற்காகத்தான்.

என் ஆயுதத்தைப் போல
நானும் சாகாமல் இருந்தால்...

இருப்பினும் நண்பனே!
இறந்த பின்னும்
இந்த மண் என்னை முத்தமிடுகின்ற போதெல்லாம்
ஒருமரமாக செடியாக முளைத்து
உன் உதவிக்கு வருவேன்

பகைவன் உணரமாட்டான்
அவனது குண்டுத் துளைப்பால்
கொப்பளிப்பது குருதி மட்டுமல்ல
எமது கொள்கைப் பிடிப்புமென்று.

இனவெறியனுக்குத் தெரியாது
நம் பதுங்குகுழிக்குள்
பாச ஊற்றுச் சுரப்பது.

நம் மயானத்தில்
மனிதம் பாட்டிசைப்பது

நம் சாவீடுகள்
சரித்திரம் படைப்பது.

எனக்குத் தெரியும்
போராளிப் புலிகள்
நண்பனின் உயிரைக்
காப்பாற்ற முடியாத போது
அவனுடைய ஆயுதத்தையும் இலட்சியத்தையும்
காப்பாற்றுவார்கள் என்பது.

வீரன் விழுகின்றபோது
அவனுடைய துவக்கு
எழுந்து நிற்கிறது
வேறொரு கையின் தழுவலுக்காக,

நண்பனே!
இருளும் என் உயிர்ச் சுடருக்குள்ளே
பதிகின்ற அறிவும், நம்பிக்கையும்
இதுதான்.

விடுதலை இரத்தம்
என்றும் விழலுக்குப் பாய்வதில்லை
வெற்றிக்கு முன்பாக ஓய்வதுமில்லை,

போராளியும், வாழையும்
தன் பரம்பரையை
விதைக்காமல் விழுவதில்லை
நானும் தான்.

## முஸ்லிம்களால்...

அரசியல் அமைப்பு வாயிலாக - எந்தக்காலத்திலுமே நிலைத்திருக்கக் கூடிய விதத்தில் முஸ்லிம் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதாக முடிவெடுத்து அதைப்பகிரங்கமாக அறிவித்து அதன்படி செயற்பட்டும் வந்தோம். ஆனாலும், பள்ளிவாசல்களின் நிர்வாகத்தை தனது கைக்குள் வைத்திருந்த- பணப்பலம்மிக்க முஸ்லிம் காங்கிரசின் தலைமை முஸ்லிம்களுக்கு சுலபமான மதவெறியூட்டியதுடன் தனது ஆயுதக்குழுவை தமிழர்கள் மீது ஏவிவிடச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தது.

சிறீலங்காப் படைகளுடன் போர்தொடங்கி சிலநாட்களில் தமிழர் பகுதிகளை நோக்கி சிங்களப்படை நகரத்தொடங்கியதும் சிங்களப் படையுடன் சேர்ந்து 'ஜிகாத்' என்ற பெயரில் முஸ்லிம் காங்கிரசின் சமூக விரோதக் குழுவினர் தமிழ் மக்களை படுகொலை செய்யத் தொடங்கினர். தமிழ்ப் பெண்களை பாலியல் வன்முறைகளுக்குள்ளாக்கத் தொடங்கினர்.

நாட்கள் செல்லச் செல்ல இந்தப்படுகொலையிலும் சூறையாடல்களிலும், பாலியல் வன்முறைகளிலும் முஸ்லிம் இளைஞர்களில் மிகப்பெரும்பாலானோர் ஈடுபடத்தொடங்கினர்.

சிறீலங்கா அரசின் தூண்டுதலின் பேரில் முஸ்லிம் காங்கிரசினால் ஊர்காவற்படைகள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு நவீன ரக ஆயுதங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. வயது வேறுபாடின்றி இந்த ஆயுதங்களை வைத்திருந்த முஸ்லிம் ஆண்கள் தமிழ் இனப்படுகொலையில் ஈடுபடத் தொடங்கினர். அம்பாறை, மட்டக்களப்பு பகுதிகளிலிருந்த பல தமிழர் கிராமங்கள் கொலைக்களங்கள் ஆகின.

சிங்களப் படைகளுடன் சேர்ந்து கொண்ட இவர்களது வெறித்தனத்தால் கிழக்கு மாகாணத்தில் 4 இலட்சம் மக்கள் அகதிகளானார்கள்.

அங்கே, கொல்லப்பட்ட 4000ற்கும் மேலான தமிழர்களில் சுமார் 2000பேர் முஸ்லிம்களால் கொல்லப்பட்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் மட்டும் கொல்லப்பட்டசுமார் 2500 தமிழர்களில் பெரும்பாலானோர் முஸ்லிம்களால் கொல்லப்பட்டனர். அங்கே பல்லாயிரக்கணக்கான மக்கள் காணாமல் போயுள்ளனர்.

இதே சமயம் எமது இயக்கத்தில் உறுப்பினர்களாக இருந்த நூற்றுக்கும்மேற்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் இயக்கத்தை விட்டோடி சிங்களப் படைகளுடன் சேர்ந்து எமது முகாம்களைக் காட்டிக் கொடுத்தனர். எமது ஆயுதங்களில்சிலபறிபோகவும், எமது போராளிகள் சிலர் கொல்லப்படவும் எமது உதவியாளர்கள் பலர் படுகொலை செய்யப்படவும் காரணமாக இருந்தார்கள்.

சிங்களப்படைகளைவிட முஸ்லிம்களாலேயே தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாகின்றனர்.

கிழக்கிலுள்ள முஸ்லிம் கிராமங்களுள் பெரும்பாலானவை இன்று ஊர்காவற்படைகள்- சிங்கள இராணுவம் சேர்ந்த ஒரு படை முகாமைப்போலவே விளங்குகின்றன.

இத்தகைய நிகழ்வுகள் முஸ்லிம் மக்கள் மீது நாம் வைத்திருந்த நம்பிக்கையைச் சிதையச்செய்து விட்டன.

இருந்த பொழுதிலும் எமது இயக்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்ற வடமாகாணத்தில் எந்த ஒரு முஸ்லிமும் கொல்லப்படவுமில்லை எந்த ஒரு முஸ்லிம் பெண்ணும் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்படவுமில்லை.

சிங்கள இனவாதப் பூதத்தைத் திருப்திப்படுத்தி அற்ப சலுகைகளைப் பெறுவதற்காக அயலவர்களான தமிழர்களைக் கொன்றொழித்த முஸ்லிம்கள் - நாளை அதே சிங்கள இனவாதப்பூதத்தால் விழுங்கப்படப்போகிறார்கள்.

* * *

## மேஜர் பவான்......

9 ம் பக்கத் தொடர்ச்சி

பட்டன. அத்தாக்குதலின் போது அவனது வழிநடத்தல், தோழர்கள் மீது அவன் காட்டிய பற்று, அவனது திறமை அனைத்தையுமே அத்தாக்குதலில் பங்குபற்றிய அவனது தோழர்கள் இன்றும் நினைவு கூர்வார்கள். அவனது சாதனைகள் தொடர்ந்தன.

இறுதியில் - 3.7.1990

தம்பலகாமப் பகுதியிலிருந்து கிண்ணியாவிற்கு முன்னேறிய சிறீலங்கா இராணுவத்தினரை சூரங்கல் பகுதியில் பவானின் தலைமையில் எம்மவர்கள் இடைமறித்துத் தாக்கினார்கள். அத்தாக்குதலில் வேறொரு பகுதியில் போரிட்டுக் கொண்டிருந்த தோழனின் உதவிக்காக விரைந்த பவானின் நெஞ்சில் எதிரியின் குண்டுகள் பதிந்தன.

எங்கள் தேசத்தின் மீது தமது கால்களைப்பதித்த, மிகக் கொடுமையான எதிரிகளை வீழ்த்தி அவர்களது ஆயுதங்களையும் கைப்பற்றிய பின்பு - மேஜர் பவான் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டான். மேஜர் பவானுடன், ரஜனி, பல்லவன் என்ற இளம் புலிகள் இருவரும்வீரமரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

அவனுடைய விருப்பப்படி அவனுடைய வீரமரணம் மூதூர் மண்ணில் இல்லைத்தான் - என்றாலும் தமிழ் மண்ணில்.

# எமது இலட்சிய உறுதிக்கு.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன். தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன், மற்றவர்களின் விடிவுக்காக, விமோசனத்திற்காக வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது, அர்த்தமானது, சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே, விடுதலைவீரர்கள் அபூர்வமான மனிதப் பிறவிகள். அசாதாரணமான பிறவிகள்.

ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரண மரண நிகழ்வு அல்ல. அந்தச் சாவு ஒரு சரித்திர நிகழ்வு. ஒரு உன்னத இலட்சியம் உயிர்பெறும் அற்புதமான நிகழ்வு, உண்மையில் ஒரு விடுதலைவீரன் சாவதில்லை. அவனது உயிராக இயங்கிவந்த இலட்சியத் தீ என்றுமே அணைந்துவிடுவதில்லை. அந்தஇலட்சிய நெருப்பு ஒரு வரலாற்றுச் சக்தியாக மற்றவர்களைப் பற்றிக் கொள்கிறது. ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவைத் தட்டிஎழுப்பி விடுகிறது.

தமிழீழ சுதந்திரப் போர் இன்று ஆசியாக் கண்டத்தில் முதன்மையான விடுதலைப் போராட்டமாக சர்வதேசப் புகழடைந்திருக்கிறது. மூன்றாம் உலகின் ஒடுக்கப்படும் இனங்களுக்கும் அடக்கப்படும் மக்களுக்கும் எமது புரட்சிகர ஆயுதப் போராட்டம் ஒரு முன்னுதாரணமாக வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. சிங்கள ஆயுதப் படைகளையும் உலகின் மிகப் பெரிய இந்தியப் படைகளையும் தனித்து நின்று போராடி எமது மாவீரர்கள் படைத்த மகத்தான சாதனைகள் இன்று உலக வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. நீண்டதும், கடினமானதும், அபாயகரமானதுமான இந்த யுத்தங்களில் எம்து விடுதலை வீரர்கள் சந்தித்த இன்னல்களை, இடையூறுகளை, துன்பங்களை எழுத்தில் விபரிக்க முடியாது. இரும்பையொத்த இலட்சிய உறுதியுடன், எதையும் தாங்கும் இதயத்துடன், சாவுக்கு அஞ்சா வீரத்துடன் எமது வீரர்கள் போராடினார்கள். போர்க்களத்தில் வீரமரணத்தைத்தழுவினார்கள்.

நான் உயிருக்கு உயிராக நேசித்த தோழர்கள், என்னுடன் தோளோடு தோள் நின்று போராடிய தளபதிகள், நான் பல்லாண்டு காலமாக வளர்த்தெடுத்த போராளிகள் களத்தில் வீழ்ந்த போதெல்லாம் எனது இதயம் வெடிக்கும். ஆயினும் சோகத்தால் நான் சோர்த்து போவதில்லை. இந்த இழப்புக்கள் எனது இலட்சிய உறுதிக்கு மேலும் மேலும் உரமூட்டியிருக்கிறது.

இந்த மாவீரர்களை நான் கௌரவிக்கின்றேன்.

அவர்களுக்குச் சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறேன். அவர்களது தியாகத்தையும் வீரத்தையும், விடுதலைப் பற்றையும் எண்ணிப் பார்க்கும் போது எனது உள்ளம் பெருமை கொள்கின்றது.

இந்த மண்ணின் மைந்தர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களையும் நான் போற்றுகின்றேன்.

உங்களது குழந்தைகள் தமது உயிருக்கும்மேலாக தமது தாய் நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள். இந்த உத்தம மானவர்களை ஒரு புனித இலட்சியத்திற்கு உவந்தளித்த பெற்றோராகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ள வேண்டும். உங்களது குழந்தைகள்சாகவில்லை, சரித்திரமாகிவிட்டார்கள்.

எமது தாய் நாடு விடுதலை பெற வேண்டும், எம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்பட வேண்டும். எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும். இந்த இலட்சியம் ஈடேறவேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆகவேண்டும். இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும்.

நாம் ஒருஇலட்சிய விதையை விதைத்திருக்கிறோம். அதற்கு எமது வீரர்களின் இரத்தத்தால் நீர் பாய்ச்சி வளர்க்கிறோம். அந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை நினவாக்கும்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

# வீர வணக்கம்



லெப். சங்கர்
( செ. சத்தியநாதன் )
கம்பர்மலை.
வீரமரணம்: 27-11-82



லெப். சீலன்
( ஆ. சாள்ஸ் அன்ரனி )
திருமலை.
வீரமரணம்: 15-7-83




ஆனந்தன்
( இ. அருள்நாதன் )
மயிலிட்டி.
வீரமரணம்: 15-7-83



லெப். செல்லக்கிளி
( ச. செல்வநாயகம் )
கல்வியங்காடு.
வீரமரணம்: 23-7-83

## அடிக்கற்கள்

இவர்கள் தமிழீழ அன்னையின் மூத்த புதல்வர்கள்.
எமது இயக்கத்தின் முன்னோடிகள்.
எமது மண்ணும், மக்களும் சுதந்திரமாக வாழமுடியும் என்ற நம்பிக்கையை ஊட்டியவர்கள்.
போராளிகளுக்கு வழிகாட்டிகளாகத் திகழ்ந்தவர்கள்.
எமது தலைவனின் தளபதிகள்.
தமிழீழ தேசத்தின் அடிக்கற்கள்.
இந்த இரண்டாவது மாவீரர்நாளில் இவர்களை நினைவுகூருகின்றோம்.



கப்டன் பண்டிதர்
( சி. ரவீந்திரன் )
கம்பர்மலை.
வீரமரணம்: 9-1-85



கப்டன். லாலாரஞ்சன்
( க. ஞானேந்திரமோகன் )
பருத்தித்துறை.
வீரமரணம்: 13-7-84




மேஜர் அல்பேட்
( க. குபதிதி )
அச்சுவேலி.
வீரமரணம்: 21-12-85



லெப். கேணல் விக்டர்
( மருஸலின் பியூஸ்லஸ் )
பனங்கட்டிக்கொட்டு.
வீரமரணம்: 12-10-86



மேஜர் கட்ணாஸ்
( சி. சிற்றம்பலம் )
கந்தளாய்.
வீரமரணம்: 5-11-86



கப்டன் றெஜி
( சு. மகேஸ்வரன் )
காரைநகர்.
வீரமரணம்: 2-12-85



லெப்.கேணல் புலேந்திரன்
( கு. தர்மராசா )
திருமலை.
வீரமரணம்: 5-10-87



கப்டன் லிங்கம்
( சி. செல்வகுமார் )
வல்வெட்டித்துறை.
வீரமரணம்: 24-4-86



லெப். கேணல் சந்தோசம்
( க. உமைநேசன் )
அரியாலை.
வீரமரணம்: 21-10-87



லெப்டினன் கேணல் பொன்னம்மான்
( யோ. குகன் )
யாழ். கலட்டி.
வீரமரணம்: 14-2-87